REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

2023 பெப்ரவரி 28 செவ்வாய்க்கிழமை

தினகரன்

THINAKARAN தினகரன்

1932 - 2022

வரு. 91 இல. 50 | Tuesday 28, February, 2023 | 28பக்கங்கள் | 50/-

எமது நாட்டு கடற்றொழிலாளர்களை பாதிக்கும் எந்த தீர்மானத்துக்கும் இடமில்லை

வடக்கு கடலில் மீன்பிடிக்க வேறு எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை

இந்திய மீனவர்களின் அத்துமீறிய ஊடுருவலைத் தடுத்து, இலங்கை மீனவர்களின் வாழ்வாதாரங்களைப் பாதுகாக்க உயர்ந்த பட்ச கவனம் செலுத்தியுள்ளதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.உள்ளூர் மீனவர்களின் வாழ்வாதார நலன்களில் கூடிய கவனம் செலுத்தி வரும் இன்றைய சூழ்நிலையில், இந்திய மீனவர்களுக்கு வடக்கு கடற்பரப்பில் தொழில்புரிய அனுமதிக்கப்பட்டுள்ளதாக வெளியான செய்திகளுக்கு மறுப்புத் தெரிவித்தே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார். இதுபற்றி அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது, இந்தியக் கடற்றொழிலாளர்கள் வடக்கு கடற்பரப்பில் மீன்பிடித் தொழிலை மேற்கொள்வதற்கான அனுமதிகளை வழங்குவது தொடர்பாக தீர்மானங்கள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை.

இலங்கை கடற்றொழிலாளர்களை பாதிக்கும் வகையிலான எவ்வாறான தீர்மானங்களும் மேற்கொள்ளப்படமாட்டாது. குறுகிய சுயலாப நலன்களுக்காக சில தரப்புக்கள் தவறான செய்திகளை மக்கள் மத்தியில் பரப்பி வருகின்றன. கடந்த காலங்களில் நாட்டின் வடபகுதிக் கடற்பரப்பில், சீனா கடலட்டைப் பண்ணைகளை அமைப்பதாகவும் புரளிகள் கிளப்பிவிடப்பட்டன. எனினும், பின்னர் இப்புரளிகள் தோற்றுப் போயின. இந்நிலையில், இந்திய கடற்றொழிலாளர்களுக்கு அரசாங்கம் அனுமதி அளிக்கப் போவதாக, சிலர் கதைகள் கூற ஆரம்பித்துள்ளனர். இவ்வாறான புரளிகள் தொடர்பில் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும். அதேவேளை, இந்தியக் கடற்றொழிலாளர்களின் அத்துமீறிய எல்லை தாண்டிய சட்டவிரோத தொழில் முறையை முழுமையாக கட்டுப்படுத்த வேண்டும். இதில் எந்தவிதமான சமரசத்திற்கும் இடமில்லை என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழு அமர்வுகள் நேற்று ஆரம்பமாகின

இலங்கை உட்பட ஆறு நாடுகள் தொடர்பில் மீளாய்வு

அமர்வுகள் மார்ச் 24 வரை

(லோரன்ஸ் செல்வநாயகம்)

ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 137 வது அமர்வு நேற்று உத்தியோகபூர்வமாக ஆரம்பமாகியுள்ளது. இந்த அமர்வு எதிர்வரும் மார்ச் (24) வரை நடைபெறவுள்ளது. இதில், இலங்கை 06

கடந்து வந்த சகல அரசாங்கங்களும்

கடன் பெற முடியாதபோது பணத்தை அச்சிட்டன

வருடத்துக்கு ஒரு முறை இடம்பெற்றதே வரலாறு

கடனைப் பெற்றுக் கொள்ள முடியாத சந்தர்ப்பங்களில் சகல அரசாங்கங்களும் பணத்தை அச்சிட்டதாக,வெகுஜன ஊடக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார். கொழும்பு ஊடகவியலாளர் கிரிக்கெட் லீக்கில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அமைச்சர், கடந்த அரசாங்கங்களில் ஆட்சியாளர்கள் யாராக இருந்தாலும், கடன் பெற முடியாத 06

உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள பாகிஸ்தான் கடற்படையின் பிரதானி அட்மிரல் மொஹம்மட் அம்ஜாட் கான் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து கலந்துரையாடியபோது பிடிக்கப்பட்ட படம்.

கொழும்பில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில்
காயமடைந்த நிவித்திகல வேட்பாளர் வைத்தியசாலையில் மரணம் 06

யானைக்கால் நோயாளர்களின் எண்ணிக்கையில் திடீர் அதிகரிப்பு 06
எட்டு மாவட்டங்களில் நோய் பரவும் அபாயம்

QR முறைமையை நீக்குவது குறித்து எந்த தீர்மானமும் இல்லை

உலவும் செய்திக்கு எரிசக்தி அமைச்சர் கஞ்சன பதில்

தேசிய எரிபொருள் அனுமதிப்பத்திர (QR) முறைமையை எதிர்வரும் ஏப்ரல் 10 ஆம் திகதி முதல் நீக்குவது குறித்து எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என, மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

தமது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தின் ஊடாக அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இந்நிலையில், தற்போதைய எரிபொருள் ஒதுக்கீட்டை படிப்படியாக அதிகரிக்க, தேசிய எரிபொருள் அனுமதிப்பத்திர தரவுகள் 06

இலங்கைக்கு IFC 400 மில்லியன் டொலர் நிதியுதவி !

உலக வங்கியின் முதலீட்டுப் பிரிவான, சர்வதேச நிதியளிப்பு கூட்டுத்தாபனம் (IFC), அத்தியாவசிய இறக்குமதிகளுக்கு நிதியளிப்பதற்காக 400 மில்லியன் அமெரிக்க டொலரை, குறுக்கு நாணய பரிமாற்று வசதியாக இலங்கைக்கு வழங்கவுள்ளதாக தெரிவித்துள்ளது. இதனூடாக, மருந்து, உணவு மற்றும் உரம் 06

இலங்கையில் பூகம்பம் ஏற்பட வாய்ப்பில்லை

பூகற்பவியல் ஆய்வு, சுரங்கப்பணியகம் உறுதி

(லோரன்ஸ் செல்வநாயகம்)

இந்தியாவின் சில பிரதேசங்களில் விரைவில் 8 ரிக்டர் அளவிலான பூகம்பம் இடம்பெறுமென, அந்நாட்டு நிபுணர்கள் தெரிவித்துள்ள நிலையிலும்,இலங்கைக்கு எத்தகைய பாதிப்பும் ஏற்படாதென, பூகற்பவியல் மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது. இந்தியாவின் இமாலய பிரதேசத்தை அண்டிய பகுதிகளில் விரைவில் பாரிய 06

தினேஷ் மரணம், கொலையா? தற்கொலையா

சகல ஆவணங்களையும் நிபுணர் குழாமிடம் கையளிக்க உத்தரவு

கொழும்பு மேலதிக நீதவான் நேற்று பணிப்பு

கோடீஸ்வர வர்த்தகரான தினேஷ் ஷாப்டரின் மரணம் தற்கொலையா? அல்லது கொலையா? என்பதை கண்டறிவதற்காக, தடயவியல் நிபுணர்கள் மற்றும் விசேட சட்ட வைத்திய அதிகாரிகள் அடங்கிய 5 பேர் கொண்ட குழாமொன்று நேற்று (27) 06

சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு இவ்வாரம் புதிய உறுப்பினர்கள்

1600 விண்ணப்பங்கள் ஆராய்வு

சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு இவ்வாரம் புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்படவுள்ளதாக, அரசாங்கத்தின் தகவல் தரப்புகள் தெரிவிக்கின்றன. இதற்கான விண்ணப்பங்களைக் கோரும் நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளதாகவும், இதையடுத்து அவ்விண்ணப்பங்களை ஆய்வு செய்யும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாகவும் அத்தகவல்கள் தெரிவிக்கின்றன. 06

மலையக மக்களுக்கு நிவாரண விலையில் முட்டை

மலையக மக்களுக்கு நிவாரண விலையில் முட்டை வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது அவசியமென, தமிழ் முற்போக்கு கூட்டணி தெரிவித்துள்ளது. கொட்டகலை பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் பங்கேற்று உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் வீ, இராதாகிருஷ்ணன் இதனைத் தெரிவித்தார். இங்கு உரையாற்றிய 06

தேர்தலுக்கு நிதி வழங்கக்கோரி

ஐ.ம.ச தாக்கல் செய்த மனு மார்ச் 03 இல் பரிசீலனை

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடத்துவதற்காக 2023ஆம் ஆண்டுக்கான பாதீட்டின் மூலம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை விடுவிக்காமைக்கு எதிராக, ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தாக்கல் செய்த மனுவை பரிசீலிக்க உயர்நீதிமன்றம் 06

பயிற்சி நடவடிக்கைக்காக

இந்திய கடற்படை கப்பல் சுகன்யா இலங்கை வருகை

இந்திய கடற்படைக் கப்பல் (ஐஎன்எஸ்) 'சுகன்யா' உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு, நேற்று காலை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது. வருகை தந்த கப்பலை இலங்கை கடற்படையினர் கடற்படை மரபுகளுக்கு அமைவாக வரவேற்றனர். ஐஎன்எஸ் சுகன்யா 06

கவிதாயினி மேகா மிர்சா எழுதிய புல்ஏந்தா பனித்துளிகள் நூல் வெளியீட்டு விழாவில், பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் முஷர்ரப்முது நபீனுக்கு, நூலின் பிரதியை ஆசிரியர் கையளிக்கிறார்.

ஆதரவற்றோர் இல்லத்தில் சிறுமிகளுக்கு நேர்ந்த கொடூரம்!

இல்லப்பராமரிப்பாளரின் கணவர் கைவரிசை

கைதானவருக்கு மார்ச் 08 வரை விளக்கமறியல்

இரத்தினபுரி, ரக்வானவிலுள்ள சிறுவர் இல்லம் ஒன்றில் 11 சிறுமிகளை பாலியல் துஷ்பிரயோகம் செய்த அறுபது வயதுடைய நபரொருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இந்நபர், அப்பகுதியிலுள்ள எரிபொருள் 06

மார்ச் 19 க்குள் உள்ளூராட்சி தேர்தல் நடத்தப்பட வேண்டும்

சுமந்திரன் எம்பி தெரிவிப்பு

உள்ளூராட்சித் தேர்தல் எதிர்வரும் மார்ச் 19 க்கு முன்னர் கட்டாயம் நடத்தப்பட வேண்டுமென, தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண அலுவலகத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இங்கு கருத்து தெரிவித்த சுமந்திரன் எம்பி தெரிவித்ததாவது, விலைவாசிகள் உயர்ந்த வண்ணம் உள்ளன. விலைவாசி அதிகரிப்பு, வரி அதிகரிப்புக்களால் மக்கள் 06

கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைது

தலைமன்னாரில் சம்பவம்

(மன்னார் குறூப் நிருபர்)

தலைமன்னார் பிரதான வீதியின் களப்பு பிரதேசத்தில் நேற்று திங்கட் கிழமை (27) காலை ஒரு தொகுதி கேரள கஞ்சா பொதிகள் மீட்கப்பட் டுள்ளதோடு, சந்தேகநபரொருவரும் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபரிடமிருந்து 41 கிலோ 620 கிராம் கேரள கஞ்சா போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸ் உத்தியோகத்தர் ஒரு வருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பிரகாரம் கேரள கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டன. சந்தேக நபர் கருங்கண்டல் வண்ணாங்குளம் பகுதியை சேர்ந்த 25 வயதுடையவர் என தெரியவருகின்றது.

கசிப்புடன் ஒருவர் கைது

சாவகச்சேரி விசேட நிருபர்

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட மட்டுவில் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல் ஒன்றரை லீற்றர் கசிப்புடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். சாவகச்சேரிப் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படை யில் இக்கைது நடவடிக்கை முன்னெ டுக்கப்பட்டுள்ளது. கைதான நபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற் கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

வடக்கின் உதயம்

வடமாகாண மீனவர்கள் பிரச்சினை

மீனவ அமைப்புகளுடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

மன்னார் மாவட்ட சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் கோரிக்கை

(மன்னார் குறூப் நிருபர்)

வட மாகாண மீனவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் குறித்து மீனவ அமைப்புகளுடன் அரசாங் கம் கலந்துரையாடி ஆக்கப்பூர்வ மான நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டுமென மன்னார் மாவட்ட சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

வட மாகாண மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து மன்னார் மாவட்டத்தி லுள்ள சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் இணைந்து நேற்று திங்கட்கிழமை (27) காலை 11 மணியளவில் மன்னாரில் ஊடக சந்திப்பொன்றை மேற்கொண்ட னர்.

இதன் போது அவர்கள் கருத்து தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்ட மீனவர்கள் பல்வேறு விதங்களில் தொடர்ந் தும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். மாவட்டத்தில் அபிவிருத்தி என்ற பெயரில் மன்னார் மண்ணை யும், இங்குள்ள வளங்களையும் சுரண்டிக் கொண்டிருக்கின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

காற்றாலை என்ற பெயரில் மன் னாரினுடைய தீவுப்பகுதியில் பல அழிவுகரமான செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

எனவே காற்றாலை திட்டத்தை வேறு இடத்திற்கு மாற்ற நடவ டிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

மன்னார் தீவு பகுதியில் இல்லா மல் மக்கள் பயன்படுத்தாத பல இடங்கள் அருகில் இருக்கின்றன.

அந்த இடங்களில் காற்றா லைகளை அமைக்கின்ற போது மீனவர்களின் பிரச்சினைகளும், வாழ்வியல் பிரச்சினைகளும் இல் லாமல் போகும்.

நாங்கள் அபிவிருத்திக்கு தடை யானவர்கள் இல்லை.எனினும் மக்களின் வாழ்வியல்,உரிமை, தொழில் பாதிக்கப்படும் வகை யிலுள்ள காற்றாலை திட்டத்தை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டு மென அவர்கள் கோரிக்கை விடுத் துள்ளனர்.

குருந்தூர் மலை விவகாரம்

பாராளுமன்ற உறுப்பினர்கள் இரவில் திடீர் கண்காணிப்பு விஜயம்

மாங்குளம் குறூப் நிருபர்

முல்லைத்தீவு குருந்தூர் மலையில் நீதிமன்ற கட்டளையை மீறி பௌத்த விகாரையின் கட்டுமான பணிகள் நிறைவு கட்டத்தை அடைந்துள் ளதாக குற்றம்சாட்டப்பட்டு வந்த நிலையில் நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணியளவில் பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம்,செல்வராசா கஜேந் திரன் உள்ளிட்ட கட்சி முக்கியஸ் தர்கள் அப்பகுதிக்கு திடீர் விஜயம் மேற்கொண்டிருந்தனர்.

கடந்த வருடம் ஜூலை மாதம் 19 ஆம் திகதி முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தினால் பௌத்த கட்டுமா னங்களை தொடர்ந்து முன்னெடுக்க முடியாது என உத்தரவிடப்பட்டுள் ளது. இருந்த போதிலும் இக்கட்ட ளையை மீறி தொடர்ந்து கட்டுமான பணிகள் முன்னெடுக்கப்பட்டு வரு வதாக பொதுமக்கள், பிரதேச பாரா ளுமன்ற உறுப்பினர்கள் என பலரும் குற்றம்சாட்டிவருகின்றனர்.

அதுவும் கட்டுமானப் பணிகள் இராணுவத்தினரால் இரவுவேளை களில் முன்னெடுப்பதாக தெரிவிக் கப்பட்டது. அதற்கமையவே இது தொடர்பில் கண்காணிப்பதற்கு பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்ட கட்சி முக்கியஸ்தர்கள் அப்பகுதிக்கு திடீர் விஜயம் மேற்கொண்டிருந் தனர்.

இதன்போது, குருந்தூர் மலையின் கீழ்ப்பகுதியும் மேற்பகுதியும் முற் றுமுழுதாக இராணுவத்தினர் இருந் துள்ளனர்.

குருந்தூர் மலையின் கட்டுமா னப் பணிகளுக்கு தேவையான சுண் ணாம்பு பக்கற்றுக்களும் கட்டுமான பொருட்களும் அங்கு காணப்பட்ட துடன் 50ற்கு மேற்பட்டவர்கள் தங் குவதற்கான வசதிகளுடன் கட்டில் கள் போடப்பட்டு மின்சார வசதிகள் உள்ளிட்ட அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரி வித்தனர்.

எதிர்பாராத நேரத்தில் அங்கு சென் றமையினால் குருந்தூர் மலையில் நீதிமன்ற கட்டளையை மீறி இடம் பெறும் வேலைத்திட்டங்களின் சூத்திரதாரிகள் மாட்டிக் கொண்டுள் ளனர். இவ்வாறான திட்டமிட்ட பௌத்த மயமாக்கல் தொடர்பில் மார்ச் மாதம் இடம்பெறும் ஐ.நா அமர்வுகளில் சர்வதேச சமூகத்துக்கு கொண்டு செல்லவுள்ளதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாரா ளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

யாழ்.போதனா வைத்தியசாலைக்குள் நுழைய முயற்சித்த வன்முறைக் கும்பல்

காவலாளி மீது வாள் வெட்டு தாக்குதல்

பருத்தித்துறை விசேட நிருபர்

யாழ். போதனா வைத்தியசாலைக்குள் அத்துமீறி நுழைய முயன்ற வன்முறை கும்ப லொன்று போதனா வைத்தியசாலை காவலாளி மீது வாள்வெட்டு தாக்குதல் நடத்த முயற்சித் துள்ளதுடன், பொருட்களை வாளால் வெட்டி சேதப்படுத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் நேற்றிரவு 9.30 மணியளவில் இடம்பெற்றது. சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, யாழ்.போதனா வைத்திய சாலையின் பிரேத அறை பக்கமுள்ள நுழைவா யிலுக்கருகில் பட்டா வாகனத்தில் வந்த சிலர் கதவால் ஏறி குதித்து வைத்தியசாலைக்குள் நுழைய முற்சித்துள்ளனர்.

இதனை அவதானித்த வைத்தியசாலை காவலாளி அவர்களை தடுக்க முயன்றபோது காவலாளி மீது தாக்குதல் நடத்த முயன்றது டன், அவர்கள் வந்த பட்டா வாகனத்திலிருந்து வாளை எடுத்து காவலாளியை வெட்ட முயற் சித்துள்ளனர். இதனையடுத்து சுதாகரித்துக் கொண்ட காவலாளி அவர்களை தடுக்க முயற் சித்துள்ளார். இதன்போது வன்முறை கும்பல் அங்கிருந்த கதிரை, மேசை போன்றவற்றை வாளால் வெட்டி சேதப்படுத்தி விட்டு பின்னர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர். இச்சம்ப வம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

அமெரிக்காவைத் தளமாகக் கொண்டு இயங்கிவரும் 'அறிவியல் மாற்றம் சமூக மேம்பாட்டு நிறுவனம்' (SCSDO), நாட ளாவிய ரீதியில், பலதுறைகளில் திறமைகளை வெளிப்படுத்திய துறைசார் ஆளுமைக்கான விருதுகளை வழங்கியது. 'சர்வதேச ரீதியிலான சொற்பொழிவுகளுக்கான விருதினை' தமிழருவி த. சிவகுமாரன் பெற்றுக்கொண்ட போது...

கொட்டகலை ரொசிட்டா பண்ணையில் தீ பரவல்

எரிபொருள் நிரப்பு நிலைய செயற்பாடுகள் ஒரு மணித்தியாலம் இடைநிறுத்தம்

ஹற்றன் சுழற்சி நிருபர்

தேசிய பண்ணை அபிவிருத்தி சபையின் கொட்டகலை ரொசிட்டா பண்ணையில் ஏற்பட்ட தீ பரவல் கார ணமாக பல ஏக்கர் நிலபரப்பு எரிந்து நாசமாகியுள்ளது.

ஹற்றன் நுவரெலியா பிரதான பாதையில் காணப்படும் புற்தரையில் நேற்றுமுன்தினம் (26) பிற்பகல் ஏற் பட்ட தீ பரவல் காரணமாக இப்பிர தேசம் முழுவதும் புகை மண்டலமாக காட்சியளித்தது. இதன்போது பண் ணைக்கு அருகிலுள்ள கொட்டகலை எரிபொருள் நிரப்பு நிலையம் வரை தீ பரவியதன் காரணமாக எரிபொருள் நிரப்பு நிலையத்தின் செயற்பாடுகள் சுமார் ஒரு மணித்தியாலம் நிறுத்தப் பட்டது. இந்நிலையத்தின் ஊழியர் களின் பெரும் முயற்சியின் காரண மாக எரிபொருள் நிரப்பு நிலையம் தீயிலிருந்து காப்பாற்றப்பட்டது. எரி பொருள் நிரப்பு நிலைய ஊழியர்கள் நிலையத்தில் காணப்பட்ட நீரை பயன் படுத்தி எரிபொருள் நிலையம் வரை பரவிய தீயினை பெரும் போராட் டத்தின் பின்னர் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததனர். எனினும் தீ தொடர்ந்து மறுப்புறம் பண்ணையின் புற்தரை வழியாக தொடர்ந்து பரவி யது. பின்னர் நிரப்பு நிலையத்தின் செயற்பாடுகள் ஒரு மணித்தியாலத் தின் பின்னர் வழமைக்கு திரும்பின.

மலைச்சாரலி

மத்திய மாகாண சபைக்கு புதிய செயலாளராக சீ.கே.இலங்ககோன் நியமிக்கப்பட்டுள் ளார். இவருக்கான நியமனக்கடிதத்தை மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே தமது கண்டி அலுவலகத்தில் வைத்து கையளித்த போது எடுக்கப்பட்ட படம்.

(படம் அக்குறணை குறூப் நிருபர்)

கிரிமிட்டிய பிரதேசத்தில் நீராட சென்ற இளைஞன் சடலமாக மீட்பு

தலவாக்கலை குறூப் நிருபர்

நானுஓயா டெஸ்போட் கிரிமிட் டிய பிரதேசத்தில் நீர்வீழ்ச்சிக்கு அரு கிலுள்ள ஆற்றில் நீராடச் சென்ற இளைஞனொருவன் நேற்று முன்தி னம் மாலை (26) நீரில் மூழ்கி உயிரி ழந்துள்ளதாக நானுஓயா பொலிஸார் தெரிவித்தனர். நானுஓயா டெஸ் போர்ட் தோட்ட வாழைமலை பிரிவில் வசித்து வந்த மகாதே வன் சதீஷ் குமார் (வயது 18) என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந் துள்ளார்.

உயிரிழந்த இளைஞனும் ஏனைய இளைஞர்களும் நீர்வீழ்ச்சியின் அடிவாரத்திலுள்ள ஆற்றில் குளிப் பதற்குச் சென்றதாகவும், அவர் கள் குளித்துக் கொண்டிருந்த வேளை அவர்களில் ஒருவர் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். விட யமறிந்து சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் காணாமல் போன இளைஞனை தேடும் பணிகளில் ஈடு பட்டனர்.

எனினும் இளைஞன் சடலமா கவே மீட்கப்பட்டுள்ளார். இதனை தொடர்ந்து விசாரணையின் பின்னர் சடலம் பிரேதப் பரிசோதனைக்காக நுவரெலியா பொது வைத்தியசா லைக்கு கொண்டு செல்லப்பட்டது. இது தொடர்பான மேலதிக விசார ணைகளை நானுஓயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இளைஞன் சடலமாக மீட்பு

நானுஓயா பொலிஸ் பிரிவுக்கு உட் பட்ட டெஸ்போட் பிரதேசத்தில் மேல் கொத்மலை நீர்த்தேக்கத்திற்கு செல்லும் ஆற்றில் நீராடச் சென்ற இளைஞன் ஒருவர் சடலமாக மீட்கப் பட்டுள்ளதாக நானுஓயா பொலிஸார் தெரிவித்தனர். நேற்று முன்தினம் (26) மாலை இந்தச் சம்பவம் இடம்பெற் றுள்ளது.

டெஸ்போட் மேல் பிரிவு தோட் டத்தைச் சேர்ந்த 18 வயது மகேந்தி ரன் சதிஸ்குமார் என்ற இளைஞரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார். நண்பர்களுடன் நீராடிக்கொண்டி ருந்த போதே இவர், நீரில் மூழ்கிக் காணாமல் போயிருந்த நிலையில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

வீட்டாருடன் ஏற்பட்ட முரண் பாடு காரணமாக நானுஓயாவில் கிலாரண்டன் பகுதியில் தனது உறவி னர் வீட்டில் ஐந்து நாட்களாக தங்கி இருந்த இவர், நண்பர்களுடன் நீராடச் சென்றுள்ளார் என ஆரம்பகட்ட விசார ணையில் தெரியவந்துள்ளது.

பொலிஸார், பிரதேச மக்கள் மற்றும் சுழியோடிகளின் உதவியுடன் இளை ஞனின் சடலம் மீட்கப்பட்டு, பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலை யில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பதுளை மாவட்டத்தில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு பாடசாலை அப்பியாசப் புத்தகங்கள் மற்றும் கற்றல் உபகரணங்களை பகிர்ந்தளிக்கும் வைபவம் பதுளை ஹிங்குருகமுவ ஸ்ரீ ரத்னபாலாராமய விகாராதிபதி பலாவத்த சேனாநந்த தேரரின் ஏற்பாட்டில் மகரகம கோல்டன் சிட்டி லயன்கஸ் கழகத்தின் புஷ்பா மெண்டிஸ், மாரி வன்னியாராச்சி, மற்றும் பரோ பகாரி பிரேமசந்திர வன்னியாராச்சி, நந்தன மெண்டிஸ் ஆகியோரின் அனுஷரணையில் அண்மையில் இடம்பெற்றபோது பிடிக்கப்பட்ட படம்.

பொன்னர் சங்கர் கூத்து திருவிழா

கினிகத்தேனை தினகரன் நிருபர்

வட்டவளை மீனாட்சி தோட்ட பெரிய காண்டியம்மன் கோவிலின் பாரம்பரிய பொன்னர் சங்கர் கூத் துடன் தொடர்புடைய வருடாந்த திருவிழா நேற்றுமுன்தினம் இடம் பெற்றது.

இதன்படி முதல் நாளன்று இரவு மகா முனிக்கு பழி பூஜை இடம் பெற்றது.

இதனை தொடர்ந்து மறுநாள் 26 அன்று பொன்னர் சங்கர் தொடர் புடைய கதை அபிநயம் செய்த தோடு அதற்குரிய பூஜைகளும் இடம்பெற்றது. பொன்னர் சங்க ருக்குரிய பாத்திரங்கள் ஊர்களுக் குள் சென்று கூத்து ஆடப்பட்டது.

பொன்னர் சங்கர் கூத்தினை மஸ்கெலிய பிரவுன்சிக் பொன்னர் சங்கர் குழுவினர் ஆடிக்காட் டினர்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 பெப்ரவரி 28 செவ்வாய்க்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

தொழுகை நேரம்

சுபஹ்	05.09
லுஹர்	12.25
அஸர்	03.45
மஃரிப்	06.23
இஷா	07.33

இன்றைய சுபதினம்

சுபகிருது வருடம் மாசி 16

ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி

தவக்கால சிந்தனை

மன்னிப்போம் மறப்போம்

(செவ்வாய் மத்தேயு 6: 7 – 15)

தவக்காலத்தில் முதலாம் வாரத்தில் பயணிக்கின்றோம். இன்றைய வாசகங்கள் மன்னிப்பின் மகத்துவம் தொடர்பில் எம்மை சிந்திக்க வைக்கின்றன.

மன்னிப்பளித்து அன்பை வளர்ப்பதற்கு உகந்த காலமாக தவக்காலம் விளங்குகின்ற நிலையில் நாமும் பிறரை மன்னித்து அன்பை வளர்ப்பதில் முனைப்புடன் செயல்படுவோம்.

இயேசு தமது பணிக்காலத்தில் மாந்தருக்கு செபிக்கக் கற்றுக்கொடுத்து அதற்கான மாதிரி செபத்தையும் சொல்லிக்கொடுத்தார். அதனையே இன்றைய நற்செய்தி பறைசாற்றுகிறது.

இயேசுவின் இறைவேண்டலில் விடுக்கின்ற அழைப்புக்களுள் ஒன்றாக மன்னிப்பு திகழ்கிறது. விண்ணகத்தந்தை மாந்தரின் குற்றங்களை மன்னிக்க வேண்டுமாயின் அதற்குத் தேவையாகத் திகழ்வது யாதெனில் மாந்தரும் அடுத்தவர் குற்றங்களை மன்னிக்க வேண்டுமென்பதாகும்.

புனித அசிசியார் தமது இறைவேண்டலில், "மன்னியுங்கள், மன்னிப்பு பெறுவீர்கள்"என்று கூறுவார். அவ்வாறே இயேசுவும், "நீங்கள் பிறரை மன்னித்தாலே விண்ணகத் தந்தை உங்கள் குற்றங்களை மன்னிப்பார்"என்கிற நிபந்தனையுடன் கூடிய மன்னிப்பினை மாந்தருக்கு முன்வைக்கின்றார். ஒருவர் ஒருவருக்கு எதிராக புரிகின்ற குற்றங்களை மன்னிப்பது எளிதான செயலாக இல்லாவிட்டாலும், அதிலேதான் கிறிஸ்தவம் தங்கியுள்ளது என்பதனை மறந்துவிடலாகாது.

மாந்தருக்கு மன்னிப்பினை வழங்கி மன்னிப்பினை பெறக்கூடிய வாய்ப்பான காலம் தவக்காலமாகும். எனவே இத்தவக்காலத்தில் மன்னிப்போம், மறப்போம், அன்பினை வாழ்வினில் வளர்க்க முனைவோம்.

அருட்தந்தை நவாஜி...

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண பிரான்ஸ் உச்ச அளவில் உதவும்

அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவிடம் பிரான்ஸ் தூதுவர் உறுதி

(லோரன்ஸ் செல்வநாயகம்)

நாடு, எதிர்நோக்கியுள்ள பாரிய பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணும் வகையில், முடிந்த அளவிலான ஒத்துழைப்புகளை வழங்குவதற்கு பிரான்ஸ் அரசாங்கம் தயாராக உள்ளதாக, இலங்கையிலுள்ள பிரான்ஸ் தூதுவர் ஜீன் ப்ரேங்க்கோய்ஸ் தெரிவித்துள்ளார்.

பெரிஸ் உதவிக் குழுவின் ஊடாகவும் அதற்கு வெளியிலும் பிரான்ஸ் இலங்கைக்கு உதவுவதற்கு தயாராக உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

துறைமுக அபிவிருத்தி, கப்பல் சேவை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவுக்கும் இலங்கையிலுள்ள பிரான்ஸ் தூதுவருக்குமிடையில் விசேட பேச்சுவார்த்தையொன்று துறைமுக அபிவிருத்தி அமைச்சில் நடைபெற்றது. இதன் போதே பிரான்ஸ் தூதுவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பிரான்ஸின் விமான சேவை நிறுவனங்கள் சில இலங்கைக்கு நேரடி விமான சேவைகளை ஆரம்பிப்பதற்கு இணக்கம் தெரிவித்துள்ளன. இந்நிலையில், இது தொடர்பான பேச்சுவார்த்தையொன்றே துறைமுக அபிவிருத்தி அமைச்சில் இடம்பெற்றுள்ளது.

அந்த விமான சேவைகள் ஊடாக பிரான்சின் தேசிய சுற்றுலாப் பயணிகளை அதிகளவில் இலங்கைக்கு அனுப்ப முடியும் என்ற எதிர்பார்ப்பு உள்ளதாகவும் அவர், இதன்போது அமைச்சரிடம் தெரிவித்துள்ளார்.

பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகம் மீண்டும் திறப்பு; மட்டுப்படுத்திய விடுதி வசதிகள்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

காலவரையறையின்றி மூடப்பட்டிருந்த பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகம் நேற்று முதல் கல்வி நடவடிக்கைகளுக்காக மீண்டும் திறக்கப்பட்டுள்ளதாக, பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் நெலுவே சுமணவங்ச தேரர் தெரிவித்துள்ளார். இப் பல்கலைக்கழகம் நேற்றைய தினம் மீண்டும் திறக்கப்பட்டதால், விடுதிகளில் முதலாம் ஆண்டுக்காக அனும திபெற்றுள்ள மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டனர். எதிர்வரும் மார்ச் 03 ஆம் திகதிக்குப் பின்னரே நான்காம் வருட மாணவர்களுக்காக விடுதி வசதிகள் பெற்றுக்கொடுக்கப்படுமென்றும் அவர்

06

சவூதி தூதுக்குழு இலங்கை விஜயம் வெளிவிவகார அமைச்சருடன் சந்திப்பு

(மர்லின் மரிக்கார்)

அபிவிருத்திக்கான சவூதி நிதியத்தின் தூதுக்குழுவொன்று உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கைக்கு விஜயம் செய்துள்ளது. நிதியத்தின் மத்திய மற்றும் மேற்கு ஆசிய செயற்பாட்டு பணிப்பாளர் பொறியியலாளர் முஹம்மத் அல் மஸுத் தலைமையில் விஜயம் செய்துள்ள இக்குழுவினர், வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர். இச்சந்திப்பில் இலங்கைக்கான சவூதி அரேபியத் தூதுவர் காலித் ஹமூத் அர் கஹ்தானியும் கலந்து கொண்டார்.

கொழும்புக்கு வருகை தந்துள்ள சவூதி அரேபிய தூதுக்குழுவினர் இருபக்க நல்லுறவுகள் குறித்தும் அபிவிருத்திக்கான சவூதி நிதியத்தின் நிதியுதவியோடு இங்கு முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி திட்டங்கள் குறித்தும் கருத்துக்களைப் பரிமாறினர்.

அபிவிருத்திக்கான சவூதி நிதியத்தின் நிதியுதவியுடன் நீர், சக்தி, கல்வி, சுகாதாரம், வீதி என 12 அபிவிருத்திக் கருத்திட்டங்கள் 424.7 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவில் முன்னெடுக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

காலமானார்

காலஞ்சென்ற பிரேமதாச ஜயமான்னவின் மனைவியும், சரத் ஜயமான்ன (ஜனாதிபதி சட்டத்தரணி), நிர்மலா ஜயமான்ன, நில்மினி ஜயமான்ன, நிஷாந்த ஜயமான்ன மற்றும் புஷ்பா ஜயமான்ன ஆகியோரின் தாயாருமான மாலனி ஜயமான்ன காலமானார். அன்னாரின் பூதவுடல் இலக்கம் 545, பலகொல்ல, கெங்கல்ல இல்லத்தில் வைக்கப்பட்டு இன்று பிற்பகல் 3.00 மணியளவில் பலகொல்ல மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

காணி சுவீகரித்தல் சட்டம் (அத்தியாயம் 460) 1964ஆம் ஆண்டின் திருத்தப்பட்டபடி காணி சுவீகரித்தல் (திருத்தச்) சட்ட இல. 28இன் 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல: தி/காணி/எல்2/சுவீVI/160
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/6/2019/எச்டபிள்யூ/467

கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிகளை தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் அபரெக்க இடமாறலுக்காக சுவீகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் 02.02.2023ஆம் திகதிய 2317/69ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியின் பகுதி IIIஐப் பார்க்கவும்

அட்டவணை

மாகாணம்	: தென்
மாவட்டம்	: மாத்தறை
பிரதேச செயலாளர் பிரிவு	: திஹாகொட
கிராம சேவகர் பிரிவு	: இல. 333, உடுவ கிழக்கு
கிராமம்	: கடவெத்துவ
ஆரம்ப வரைபட இல.	: மார. 2876
துண்டு இலக்கங்கள்	: 01 மற்றும் 02
விஸ்தீரணம்	: 0.0084 ஹெக்டயார்

பிரதேச செயலாளர் மற்றும் சுவீகரித்தல் அதிகாரி,
பிரதேச செயலகம்,
திஹாகொட.

பிரதேச செயலகம்,
திஹகொட.
24.02.2023

வாகன விற்பனை

மூன்று சக்கர வாகனம்	மேக்/மாடல்	ஆண்டு	முற்றம்
ABF-0614	பஜாஜ்	2015	பாணடுர
AAU-6136	பஜாஜ்	2014	மாதர
AAI-5401	பஜாஜ்	2013	ராகம
AAG-1277	பஜாஜ்	2012	அம்பார
AAE-7876	பஜாஜ்	2012	ராகம
JB-5999	பஜாஜ்	2004	ராகம

மோட்டார் வாகனம்	மேக்/மாடல்	ஆண்டு	முற்றம்
CBB-8222	சுசுகி	2018	குருநாகல்
HW-4793	KIA	2000	ரத்தினபுர

மோட்டார் லாரி	மேக்/மாடல்	ஆண்டு	முற்றம்
LG-8040	தைஹட்சு	2002	நுவரேலியா

மேற்கண்ட வாகனங்களை யார்டுகளிலும் சோதனை செய்யலாம்
அது ஏல அடிப்படையில் இருக்கும்

ராகம 0778 523 285
நுவரேலியா 0777 717 562
குருநாகல் 0764 425 205
அம்பாறை 0773 547 556
மாதர 0771 479 490
பாணடுர 0775 215 263
ரத்தினபுர 0774 857 351

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

வீதி அபிவிருத்தி அதிகாரசபை

பொது மக்களுக்கான அறிவித்தல்

2023.03.01 ஆம் திகதி முதல் 2023.03.18 ஆம் திகதி வரை பி.ப. 10.00 மணி முதல் மு.ப.4.00 மணி வரை கொழும்பு - ஹொரண (B084) வீதியில் கொஹுவல சந்தி பகுதியாக மூடுதல்

மற்றும்

2023.03.01 ஆம் திகதி 2023.05.31 வரை வாகனப் போக்குவரத்தை கட்டுப்படுத்துதல்

கொஹுவல மேம்பாலத்தின் மேற்கட்டுமானத்தை அமைப்பதற்காக **2023.03.01** ஆம் திகதி முதல் **2023.03.18** ஆம் திகதி **பி.ப.10.00** மணி முதல் **மு.ப.4.00** மணி வரையான காலப்பகுதியில் கொழும்பு - ஹொரணை வீதியின் கொஹுவல சந்தியானது பகுதியளவில் மூடப்படும் என பொதுமக்களுக்கு இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், கொஹுவல மேம்பாலத்தின் மேற்கட்டுமானப் பணிகள் காரணமாக **2023.03.01** ஆம் திகதி **2023.05.31** ஆம் திகதி கொஹுவல சந்தியில் பயணிக்க வேண்டாம் என அனைத்து வீதி பயனாளர்களும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

பொதுமக்கள் பின்வரும் மாற்று வழிகளில் செல்லுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.



1. கொழும்பு - ஹொரணை மற்றும் ஹொரணை - கொழும்பு வரை பயணிக்கும் கனரக வாகனங்கள்

ஹொரணை நோக்கி செல்லும், கொஹுவல சந்தி ஊடாக பயணிக்கும் அனைத்து கனரக வாகனங்களும் கொழும்பு - இரத்தினபுரி - வெல்லவாய - மட்டக்களப்பு (A004) - வீதி (ஹைலெவல் வீதி) ஊடாக கம்சபா சந்தியில் செல்ல வேண்டும். கம்சபா சந்தியில் வலப்புறம் திரும்பி இரத்மலானை - மிரிஹான வீதி (B389) ஊடாக பெப்பிலியான சந்தியை நோக்கி பயணிக்க வேண்டும். பெப்பிலியான சந்தியில் இடதுபுறம் திரும்பி ஹொரணை நோக்கிச் சென்று ஹொரணையிலிருந்து வரும்போது அதைப் பின்தொடரவும்.

விலாசித்தா நிவாச (ரெதி மோல சந்தி)	3.8 km ⟷	கம்சஹா சந்தி	2.1 km ⟷	பெப்பிலியான சந்தி

2. நுகேகொடை - தெஹிவளை மற்றும் தெஹிவளை - நுகேகொட ஆகிய இடங்களில் இருந்து வரும் கனரக வாகனங்களுக்கு

கொஹுவல சந்தி ஊடாக நுகேகொட நோக்கி பயணிக்கும் வாகனங்கள் கொழும்பு - காலி - ஹம்பாந்தோட்டை - வெல்லவாய (A002) ஊடாக வெள்ளவத்தை நோக்கிச் செல்ல முடியும். வெள்ளவத்தையிலிருந்து வலப்புறம் திரும்பி டபிள்யூ.ஏ.சில்வா மாவத்தைக்குச் சென்று, ஹொரணை - கொழும்பு (B084) வீதியில் நுழைந்து விலாசித்தா நிவச (ரெதிமோல சந்தி) இடதுபுறம் திரும்பவும். செல்ல வேண்டும். விலாசித்தா நிவச (ரெதிமோல சந்தி) வலதுபுறம் திரும்பி கொழும்பு - இரத்னபுரி - வெல்லவாய - மட்டக்களப்பு வீதியில் (A004) வீதியில் நுகேகொடை நோக்கிச் செல்லவும்.

வில்லியம் சந்தி	1.5km ⟷	வெள்ளவத்தை	1.0km ⟷	B084 வீதி சந்தி	0.7km ⟷	ரெதி மோல சந்தி	2.7km ⟷	நுகேகொட

3. ஹொரணை - கொழும்பு, கொழும்பு - ஹொரணை மற்றும் ஹொரணை - நுகேகொடைக்கு செல்லும் இலகுரக வாகனம்

கொஹுவல சந்தியை கடந்து கொழும்பு மற்றும் நுகேகொடை நோக்கி செல்லும் இலகுரக வாகனங்கள் மேற்குறிப்பிட்ட 1.0 வரை வீதியை பணன்படுத்த முடியும்.

4. ஹொரணை தெஹிவளை மற்றும் தெஹிவளை ஹொரண நோக்கி செல்லும் இலகுரக வாகனங்கள்

ஹொரணையிலிருந்து தெஹிவளை நோக்கி பயணிக்கும் இலகுரக வாகனங்கள் கொழும்பு - ஹொரண வீதியில் (B084) வுட்லண்ட் அவென்யூ சந்தியை நோக்கி சென்று எண்டர்சன் வீதி சந்திக்கு செல்லலாம். எண்டர்சன் வீதியில் வலப்புறம் திரும்பி கொஹுவளை - தெஹிவளையில் (B229) வீதியில் புத்தர் சிலை சந்தியை நோக்கி இடதுபுறமாக திரும்பி கொஹுவளை - தெஹிவளையில் (B229) வீதியில் வில்லியம் வீதியை சென்றடைய முடியும்.

வுட்லேன்ட் அவன்யூ சந்தி	0.8km ⟷	என்டர்சன் வீதி சந்தி	0.7km ⟷	புத்தர் சிலை சந்தி கொஹுவல - தெஹிவல வீதி	1.9km ⟷	வில்லியம் சந்தி

5 தெஹிவளையிலிருந்து நுகேகொடை வரை மற்றும் இலகுரக வாகனங்கள் நுகேகொடையிலிருந்து தெஹிவளை வரை பயனிக்கும் இலகுரக வாகனங்கள்

தெஹிவளையிலிருந்து நுகேகொடை நோக்கி பயணிக்கும் இலகுரக வாகனங்கள் ஸ்ரீ சரணங்கர வீதி வழியாக பாமன்கடை பாலத்தை அடைய முடியும். பாமன்கடை பாலத்தில் இடதுபுறம் திரும்பி கொழும்பு - ஹொரண (B084) வீதியில் விலாசித்தா நிவச (ரெதி மோல சந்தி) நோக்கி செல்லலாம். ரெதி மோல சந்தி வலது புறம் திரும்பி கொழும்பு - இரத்தினபுரி - வெள்ளவாய - மட்டக்களப்பு (A004) வீதியில் நுகேகொடைக்கு செல்லங்கள்.

சரணன்கர வீதி	1.7km ⟷	பாமன்கட பாலம்	1.0km ⟷	ரெதி மோல சந்தி	2.7km ⟷	நுகேகொட

பணிப்பாளர் நாயகம்
வீதி அபிவிருத்தி அதிகார சபை,
'மகநெகும மஹமெதுர',
பத்தரமுல்லை.

தினகரன்
THINAKARAN
நிகரன்

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834

தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279

பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் மாசி மாதம் 16ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

ஹிஜ்ரி வருடம் 1444 ஷஃபான் பிறை 07

குறள் தரும் சிந்தனை

இகலெதிர் சாய்ந்தொழுக வல்லாரை யாரே
மிக்லூக்கும் தன்மை யவர்

மனத்தில் மாறுபாடான எண்ணம் உருவானால் அதற்கு இடம் தராமல் நடக்கக்கூடிய ஆற்றலுடையவர்களை வெல்லக்கூடியவர்கள் யாருமில்லை.

புனித இடங்களின் கௌரவம் சீர்குலைய இடமளிக்கலாகாது!

நாட்டில் முன்னொரு போதும் இல்லாத அளவுக்கு போதைப்பொருள் பாவனையும் துஷ்பிரயோகமும் அது தொடர்பிலான குற்றச்செயல்களும் அதிகரித்துள்ளன. அவை பட்டி தொட்டியெல்லாம் வியாபித்துள்ளன. இதன் விளைவாக சமூக, பொருளாதார, கலாசார பிரச்சினைகளும் சீரழிவுகளும் ஏற்பட்டுள்ளன. அவை பல மட்டங்களதும் அவதானத்தை ஈர்த்துள்ளன.

இந் நிலைமை நீடிப்பது நாட்டுக்கோ சமூகங்களுக்கோ நல்லதல்ல. அதிலும் இவ்வாறான நிலைமை நீடிப்பது நாட்டின் எதிர்காலத்திற்கு ஆரோக்கியமான பரம்பரையைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலைமைத் தோற்றுவித்து விட முடியும் என்ற அச்சமும் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான துரதிர்ஷ்டகரமான நிலையில் இருந்து நாட்டையும் மக்களையும் விடுவிக்கும் நோக்கில் போதைப்பொருள் துஷ்பிரயோகங்களைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் விரிவான அடிப்படையில் முன்னெடுக்கப்படுகின்றன. குறிப்பாக சட்டத்தை அமுல்படுத்தும் தரப்பினர் இவ்விடயத்தில் கூடுதல் கவனம் செலுத்தியுள்ளனர். இந்தப் பின்புலத்தில் போதைப்பொருள் குற்றங்களில் ஈடுபடுபவர்கள் தினமும் கைது செய்யப்படுவதோடு சட்டத்தின் முன் ஆஜர்படுத்தப்படுகின்றனர்.

போதைப்பொருள் பாவனை மற்றும் குற்றச்செயல்களின் விளைவாக ஆரோக்கிய ரீதியிலும் சமூக, கலாசார ரீதியிலும் ஏற்படும் பாதிப்புகளையும் தாக்கங்களையும் கட்டுப்படுத்தும் நோக்கில்தான் இந்நடவடிக்கைகள் முக்கியத்தும் அளித்து முன்னெடுக்கப்படுகின்றன. அந்தளவுக்கு மோசமானதாக போதைப்பொருள் குற்றங்களின் விளைவுகள் அமைவதே இதற்கான காரணமாகும். அதனால் இப்போதைப்பொருள் பாவனை மற்றும் அதனை அடிப்படையாகக் கொண்ட குற்றச்செயல்களில் இருந்து ஒவ்வொருவரையும் விடுவிப்பதே இந்நடவடிக்கைகளின் எதிர்பார்ப்பாக உள்ளது.

ஆனால் இந்த எதிர்பார்ப்பின் முக்கியத்துவத்தையும் பெறுமதியையும் அநேகர் புரிந்து கொள்ளாதவர்களாக செயற்படுகின்றனர். அதன் விளைவாகவே இக்குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்கள் தொடர்ந்தும் கைது செய்யப்படும் நிலை ஏற்பட்டு இருக்கின்றது. இது நாட்டில் போதைப்பொருள் குற்றங்களில் ஈடுபடுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து இருப்பதையே வெளிப்படுத்தி நிற்கிறது. இக்குற்றச்செயலுடன் சம்பந்தப்பட்டவர்கள் கைது செய்யப்படுபவர்கள் சட்டத்தின் முன் ஆஜர்படுத்தப்படுகிறார்கள். சட்ட ரீதியில் தண்டனையும் பெற்றுக்கொடுக்கப்படுகின்றது. போதைப்பொருள் துஷ்பிரயோகக் குற்றங்களுக்கான தண்டனைகளும் முன்பை விடவும் அதிகரிக்கப்பட்டு வலுப்படுத்தப்பட்டுள்ளன.

நாட்டின் ஒவ்வொரு பிரஜையினதும் ஆரோக்கிய, சமூக, கலாசார நலன்களை முன்னிலைப்படுத்தித் தான் இந்த அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அப்படி இருந்தும் துஷ்பிரயோகத்தில் ஈடுபடுபவர்கள் மத்தியில் இது தொடர்பில் குற்ற உணர்வற்ற மனப்பான்மை வளர்ச்சி பெற்றுள்ளது. இதற்கு போதைப்பொருளுடன் சிவனொளிபாத மலைக்கு புனித யாத்திரை மேற்கொண்டிருந்த 15 இளைஞர்கள் கைது செய்யப்பட்டிருப்பது நல்ல உதாரணமாகும். இது ஆரோக்கியமான நிலைமை அல்ல.

சிவனொளிபாத மலைக்கு யாத்திரை மேற்கொள்ளும் காலம் தற்போது ஆரம்பமாகியுள்ளது. இது ஒரு புனித யாத்திரையாகவே மேற்கொள்ளப்படுகிறது.

அவ்வாறான புனித யாத்திரையில் பங்குபற்றி இருந்த 15 இளைஞர்களை ஹற்றன் பொலிஸின் போதை ஒழிப்பு பிரிவு அதிகாரிகள் போதைப்பொருளுடன் கைது செய்து சட்டத்தின் முன் ஆஜர்படுத்தி இருக்கின்றனர்.

இது பெரும் கவலைக்குரிய நிலைமையாகும். சிவனொளிபாத மலைக்கான புனித யாத்திரையையே களங்கப்படுத்தக் கூடிய செயற்பாடே இது.

அதன் காரணத்தினால் இவ்வாறான குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக சட்ட ரீதியில் உட்சபட்ச நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அவ்வாறான செயற்பாடுகளில் ஏனையவர்கள் எதிர்காலத்தில் ஈடுபடாத வகையில் அந்நடவடிக்கைகள் அமைய வேண்டும்.

அதேநேரம் புனித யாத்திரையின் முக்கியத்துவம் மற்றும் சிறப்பு குறித்து இளம் பராயத்தினருக்கு அறிவூட்டப்படுவதும் அவசியம். அத்தோடு போதைப்பொருள் பாவனை மற்றும் துஷ்பிரயோகத்தினால் ஏற்படக் கூடிய ஆரோக்கிய ரீதியிலும் சமூக, கலாசார, பொருளாதார ரீதியிலும் ஏற்படக்கூடிய சீரழிவுகள் குறித்தும் விழிப்புணர்வுகளை ஏற்படுத்தவும் தவறக்கூடாது.

இவ்வாறான ஏற்பாடுகளின் ஊடாக போதைப்பொருள் குற்றச்செயல்களைக் குறைத்து தவிர்த்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும். அத்தோடு புனித இடங்களின் மரியாதையும் மகத்துவமும் பேணிப் பாதுகாக்கப்படும். அதுவே இன்றைய தேவையும் கூட.

போதைப்பொருள் குற்றச்செயல்களால் சமூக, கலாசார விழுமியங்களும் புனித இடங்களின் பெறுமதியும் மகத்துவமும் சீர்குலைய எவரும் துணை போகலாகாது. அதுவே மக்களின் எதிர்பார்ப்பாகும்.

editor.tkn@lakehouse.lk

மக்கள் அச்சமின்றி மீளக்குடியமர பேருதவி புரிந்த டாஸ் நிறுவனம்

உள்நாட்டு யுத்தம் 2009 இல் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பின்னர் இற்றைக்கு 13 வருடங்களை கடந்த நிலையிலும் யுத்தத்தின் எச்சங்களும், அதன் பாதிப்புக்களும் இன்னும் முழுமயாக நீங்கியதாக இல்லை. இவற்றில் முக்கியமானவை யுத்த காலத்தில் புதைக்கப்பட்ட கண்ணிவெடிகளும், வெடிக்காத வெடிபொருட்களும் ஆகும்.

இவற்றின் தாக்கம் காரணமாக இன்று தங்களது சொந்த நிலங்களில் மீளக்குடியமர முடியாமலும், விவசாயம் செய்ய முடியாமலும் ஆயிரக்கணக்கான மக்கள் உள்ளனர். இவற்றிலிருந்து மக்களை முழுமையாக மீட்கும் மிக முக்கியமாக மனிதாபிமான பணியினை ஜப்பான் அரசின் (GGP) நிதியுதவி திட்டத்தில் டாஸ் (DASH) நிறுவனம் முன்னெடுத்து வருகின்றது.

யுத்தத்துக்குப் பின்னரான கண்ணிவெடி அகற்றும் பணியில் பாரிய சாதனை

அரசசார்பற்ற கண்ணிவெடியகற்றும், மனிதாபிமான உதவி வழங்கும் நிறுவனமாக டாஸ் தனது பணிகளை வடக்கில் மேற்கொள்கிறது. 2010 ஆம் ஆண்டிலிருந்து கண்ணிவெடிகளை அகற்றி, வடமாகாணத்தில் அரசாங்கத்தின் நடவடிக்கைகளான புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்றத்திற்கு பெரிதும் உதவி வருகிறது. தற்போது கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன்படி இதுவரை சுமார் 15.5 சதுர கிலோமீற்றர் பிரதேசத்தில் கண்ணிவெடி அகற்றும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இதில் முக்கியமாக கிளிநொச்சி பல்கலைக்கழக வளாகம், நெல்வயல் நிலங்கள், ஆற்றங்கரைகள், பள்ளிக்கூட வளாகம், கோயில், ஆனையிறவு உப்புவயல்கள், பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை மற்றும் கால்நடை மேய்ச்சல் நிலங்கள் போன்றன கண்ணிவெடி அகற்றப்பட்ட பாதுகாப்பான பகுதிகளாக அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சியில் முகமாலை, முல்லைத்தீவில் மணலாறு, மற்றும் கொக்குத்தொடுவாய் பிரதேசங்களில் இதுவரை 357 இடங்களில் முழுமையாக கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன. 13 இடங்களில் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அத்தோடு 26 இடங்களில் வெடிக்காத வெடிபொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டன.

தொடங்கிய டாஸ் அமைப்பானது தற்பொழுது ஜப்பான் அரசாங்கம், அமெரிக்கா, அவுஸ்ரேலியா, ஜேர்மனிய குடியரசு மற்றும் சுவிற்ஸர்லாந்தின் கண்ணிவெடியகற்றும் உலகத்திற்கான அறக்கட்டளை என்பனவற்றின் நிதியுதவியுடன் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

டாஸ் நிறுவனம் 433 பேருடன் இயங்குகின்றது. நன்கு பயிற்சியளிக்கப்பட்ட 13 கண்ணிவெடியகற்றும் குழுக்கள் உள்ளன. தர உத்தரவாத மற்றும் ஆய்வுக்குழுக்கள் உள்ளன. அத்தோ வெடிபொருள் சம்பந்தமான விழிப்புணர்வு குழுவும், பணியாளர் மேம்படுத்தல் பயிற்சிக் குழுவும் உள்ளன.

பிரதான செயற்பாடுகளுடன் வெடிபொருட்களால் ஏற்படும் பாதிப்புகள் சம்பந்தமான விழிப்புணர்வுகளை மக்கள் மத்தியில் ஏற்படுத்தி, அவர்கள் பாதுகாப்புடன் இருக்க பயிற்சிகளை வழங்கியும் வருகிறது.

மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் பிரதான பணியினை அவர்கள் மேற்கொள்வதோடு, இந்த பணியில் ஈடுபடுகின்றவர்களின் வாழ்வாதாரத்திற்கான தொழிலாகவும் இப்பணி அமைகின்றது. இந்தப் பணியாளர்களில் 22 வீதமானவர்கள் பெண்களாவர். குறிப்பாக புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள், பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு கண்ணிவெடி அகற்றும் பணியானது வாழ்வாதாரத்திற்கான தொழிலாக அமைகிறது.

இதுவரை கண்ணிவெடி அகற்றப்பட்ட மொத்த நிலப்பரப்பு ஏறத்தாள 6.5 சதுர கிலோமீற்றர் பரப்பளவு நிலமாகும்.இதன் மூலம் நேரடியாகப் பயன் அடைந்தவர்களாக 24,301 பேரும், மறைமுகப்பயனாளிகளாக 71,083 பேரும் உள்ளனர்.

53,325 தனிநபர் கண்ணிவெடிகள், 102 கனரக வாகன கண்ணிவெடிகள், 13,591 வெடிக்காத பொருட்கள், 55,684 சிறிய ஆயத வெடிபொருட்கள் இதுவரை கண்டெடுக்கப்பட்டு பாதுகாப்பாக அழிக்கப்பட்டுள்ளன.

யுத்தத்திற்கு பின்னரான காலத்தில் மிக முக்கியமான மனிதாபிமானப் பணியாக கண்ணிவெடி அகற்றும் பணியை டாஸ் நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

மு.தமிழ்ச்செல்வன்
(கிளிநொச்சி குறூப் நிருபர்)

கிண்ணையடி சரஸ்வதி வித்தியாலய 144 ஆவது ஸ்தாபக தின நிகழ்வுகள்

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கிண்ணையடி சரஸ்வதி வித்தியாலயத்தின் 144 ஆவது வித்தியாலய ஸ்தாபக தினம் கடந்த சனிக்கிழமை சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது.

'கிண்ணையடி சரஸ்வதி வித்தியாலயத்தில் கல்வி கற்ற பழைய மாணவர்களை ஒருங்கிணைத்து, அவர்கள் ஊடாக பாடசாலையின் அபிவிருத்தியை ஏற்படுத்துவதுடன், கல்வித்தனைக் கொண்டு கருத்தொருமித்து தாய்மண்ணைக் காத்து வாழ்வில் எழுச்சி பெறுவோம்' என்னும் தொனிப்பொருளை அடிப்படையாகக் கொண்டு 144 ஆவது பாடசாலை தின நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

பழைய மாணவர்கள் மற்றும் பாடசாலை நிர்வாகத்தினரால் ஒருங்கிணைக்கப்பட்டு பழைய மாணவர்களை மையப்படுத்தியதாக விளையாட்டு நிகழ்வுகள் நடைபெற்றன. ஆண்களுக்கான கிரிக்கட் சுற்றுப் போட்டி மற்றும் பெண்களுக்கான எல்லே சுற்றுப் போட்டி ஆகியனவும் நடைபெற்றன.

பாடசாலை அதிபர் ந.சுரேந்திரகுமார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வுகளில் அயல் பாடசாலைகளின் அதிபர்கள், பாடசாலையின் முன்னாள் அதிபர்கள், பாடசாலையின் ஆசிரியர்கள், கிராம உத்தியோகத்தர் உட்பட பலரும் அதிதிகளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

முன்னதாக பாடசாலைக் கொடி அசைக்கப்பட்டு நடைபவனி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நடைபவனியில் பாடசாலையில் கல்வி கற்ற மாணவர்கள் தாம் கல்வி கற்ற காலப்பகுதியை பிரதிபலிக்கும் வகையில் வெவ்வேறு விதமான வண்ண ஆடைகளை அணிந்து காணப்பட்டனர். கல்லூரியின் சின்னம் பொறிக்கப்பட்ட பதாதைகள் மற்றும் கொடிகளை கைகளில் ஏந்தியவாறு அவர்கள் ஊர்வலமாக நடந்து சென்றனர்.

அத்துடன் நடைபவனியில் பிரதேசத்தின் கலாசாரம் சார்ந்த விடயங்கள் காட்சிப்படுத்தப்பட்டன. விளையாட்டு அணியினர், சாரண இயக்க அணியினர், சுற்றாடல் முன்னோடிக் கழக படையினர், மாணவர் தலைவர்கள், போதைப்பொருளை ஒழிப்பதற்கான ஊர்தி அணியினர் ஊர்வலத்தில் பங்கேற்றனர்.

'நஞ்சற்ற உணவுக்காக வீட்டுத் தோட்டம் செய்வோம்' என்ற தலைப்பிலான விழிப்புணர்வு ஊர்தி , மகாகவி பாரதியார், சுவாமி விபுலானந்தர், திருவள்ளுவர் ஆகியோரின் உருவப் படம் தாங்கிய ஊர்திகள் ஆகியனவும் ஊர்வலத்திற்கு அழகு செய்தன. பாடசாலையின் திறமைகளை வெளிப்படுத்தும் விதத்திலான ஊர்திகளையும் அங்கு காண முடிந்தது.

கிண்ணையடி ஆரம்பப் பாடசாலையில் இருந்து ஆரம்பமான இந்த நடைபவனியானது சுங்காங்கேணி, கறுவாக்கேணி வீதி வழியாகச் சென்று மட்டக்களப்பு_ திருமலை பிரதான வீதி வழியாக வந்து கிண்ணையடி வீதியை அடைந்தது. அங்கிருந்து கிண்ணையடி பாடசாலை மைதானத்தைச் சென்றடைந்தது.

பாடசாலை சமூகம் – பழைய மாணவர்கள் ஒன்றிணைந்து விமரிசையான கொண்டாட்டம்

மைதானத்தில் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றன. தலைமையுரை, வரவேற்பு நடனம், கலைநிகழ்வுகள் நடைபெற்றதைத் தொடர்ந்து அதிகள் உரைகள் இடம்பெற்றன.

அதிதிகள் உரையில் கிண்ணையடி சரஸ்வதி வித்தியாலய இளைப்பாறிய அதிபர் ரி. இதயராஜா உரையாற்றும் போது, இப்பாடசாலையின் கடந்தகால வரலாற்று அம்சங்களை அங்கு பதிவுகளாக முன்வைத்தார்.

இப்பாடசாலையானது வாழைச்சேனை பிரதேசத்திலுள்ள மிகவும் பழைமையான பாடசாலை என்றும், இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்தவர்களை நன்றியுடன் நினைவு கூர்வது அவசியமென்றும் முன்னாள் அதிபர் இதயராஜா குறிப்பிட்டார்.

கிண்ணையடியை சொந்த ஊராகக் கொண்ட அமரர் வி. சபாதிப்பிள்ளை ஐயா இப்பாடசாலையின் அதிபராக பொறுப்பேற்ற பின்னர் ஊரவர்களின் ஆதரவுடன் பாடசாலையின் பெயரை 'சரஸ்வதி வித்தியாலயம்' என்று மாற்றியதாகவும் இதயராஜா நினைவு கூர்ந்தார்.

அதன் பின்னர் அன்றைய அமைச்சராக இருந்த கே. டபிள்யூ. தேவநாயகம் அவர்களின் உதவியுடன் இப்பாடசாலைக்கு முதன் முதலாக பாரிய கட்டடமொன்றைப் பெற்றுக் கொடுத்ததாகவும், ஒருசில ஆசிரியர்களுடன் இயங்கிய இப்பாடசாலைக்கு பல்வேறு பாடங்களுக்குமான ஆசிரியர்கள் பலரை நியமிப்பதற்கு அமரர் சபாபதிப்பிள்ளை அதிபர் பாடுபட்டதாகவும் இதயராஜா அங்கு குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வின் போது இப்பாடசாலையில் கடமையாற்றி ஓய்வு பெற்றுச் சென்ற அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு கௌரவம் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இப்பாடசாலையின் 144 ஆவது வித்தியாலய ஸ்தாபக தின நிகழ்வானது பழைய மாணவர்களை பாடசாலை சமூகத்துடன் ஒன்றிணைப்பதற்கான வாய்ப்பை வழங்கியிருந்தது. பாடசாலை சமூகத்தினர் மற்றும் பிரதேச மக்களிடையே நல்லுறவை ஏற்படுத்தவும் வழிவகுத்துள்ளது.

முருகுப்பிள்ளை கோகிலதாசன்

பணம் அச்சிடல் தொடர்பான கட்டுக்கதைகள்

கொவிட் 19 உலகளாவிய நோய்த்தொற்றுக்கு மத்தியில் மத்திய வங்கியின் முன்னெப்பொழுதுமில்லாத தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைப்பாட்டினைத் தொடர்ந்து, குறிப்பாக 2020 இன் முற்பகுதியிலிருந்து பணம் அச்சிடுதலானது இலங்கையில் பிரபல்யமிக்க வாசகங்களின் ஒரு பகுதியாக மாற்றமடைந்துள்ளது.

சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் அதிகரிப்பு, பணச்சந்தையில் விஞ்சியளவிலான திரவத்தன்மை மற்றும் மத்திய வங்கியின் வசமுள்ள அரச பிணையங்களின் உடைமைகள் என்பவற்றுடன் மத்திய வங்கியின் பணம் அச்சிடல் செய்முறை தொடர்பில் பொருளாதாரத்தின் பல்வேறு ஆர்வலர்களினால் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. பெரும்பாலான நாடுகளில் பணம் அச்சிடுகின்ற அதிகாரம் மத்திய வங்கியிடம் காணப்பட்டாலும், வேறு சில நாடுகளில் திறைசேரி அல்லது நிதி அமைச்சு அல்லது பிரத்தியேகமானதொரு அரச முகவராண்மை என்பன கூட பணத்தை அச்சிடுகின்றன.

இலங்கையில் பணச்சபை முறைமைக்குப் பதிலாக 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கி நிறுவப்பட்டதிலிருந்து பணம் அச்சிடல் வகிபாகமானது மத்திய வங்கியின் அதிகார வரம்புக்கு உட்பட்டதாக அமைந்துள்ளது.

பணம் என்றால் என்ன?

பொருளாதார நியதிகளில் பணமென்பது மத்திய வங்கியினால் வெளியிடப்படுகின்ற நாணயத்தினை மட்டுமன்றி நிதியியல் நிறுவனங்களில் பொதுமக்களினால் வைத்திருக்கப்படும் வைப்புகளையும் உள்ளடக்குகின்றது. பணமானது முதன்மையாக, கொடுப்பனவுகளைச் செலுத்துகின்ற வழிமுறையொன்றாக அல்லது பரிவர்த்தனை ஊடகமொன்றாகக் கருதப்படுகின்றது. பணம் மூன்று முக்கிய தொழிற்பாடுகளைக் கொண்டுள்ளது.

அதாவது (i) பெறுமதிச் சேமிப்பென்பது பணமானது கொள்வனவு செய்கின்ற சக்தியை எதிர்காலத்திற்கு மாற்றுவதற்குப் பயன்படுத்தப்படுகின்றது, (ii) கணக்கின் அலகென்பது பணமானது விலைகளைக் குறிப்பீடு செய்வதற்குப் பயன்படுத்தப்படுவதுடன் அது பணப் பெறுமதியை அளவிடுகின்ற நியமமொன்றாகச் செயற்படுகின்றது மற்றும் (iii) பரிவர்த்தனை ஊடகமென்பது பணமானது பொருட்களினதும் பணிகளினதும் பரிவர்த்தனையை வசதிப்படுத்தப் பயன்படுத்தப்படுகின்றது என்பனவே அவையாகும்.

பொருளாதார நியதிகளில் மக்கள் வைத்திருக்க விரும்புகின்ற மொத்த பணத்தின் அளவானது பணத்திற்கான கேள்வியென அழைக்கப்படுகின்றது. மக்களுக்குப் பல்வேறு காரணிகளுக்காகப் பணம் தேவைப்படுகின்றது. பணத்திற்கான மொத்தக் கேள்வியானது வருமானம், வட்டி வீதங்கள் மற்றும் பணவீக்கம் அதேபோன்று எதிர்காலம் தொடர்பான நிச்சயமற்றதன்மை என்பன உள்ளடங்கலாக பல்வேறு காரணிகளினால் நிர்ணயிக்கப்படுகின்றது. வேறு எந்த நிதியியல் சொத்துக்களுக்கும் மாறாக பணத்தைக் கோருவதற்கான இக்காரணிகளை மூன்று முக்கிய காரணங்களின் மூலம் அதாவது (i) கொடுக்கல்வாங்கலுடன் தொடர்புடைய காரணங்கள், (ii) முன்னெச்சரிக்கைக் காரணங்கள் மற்றும் (iii) ஊக காரணங்கள் என்பனவற்றினால் விளக்கலாம்.

மக்கள் தங்கள் கொடுக்கல்வாங்கல் நோக்கங்களுக்காக பணத்தைக் கோருகின்றனர். கொடுக்கல்வாங்கலுடன் தொடர்புடைய காரணிகளுக்காக வைத்திருக்கின்ற பணத்தின் அளவு கொடுக்கல்வாங்கல்களுக்கான பண மீதிகள் எனப்படுகின்றன. கொடுக்கல்வாங்கல்களுக்கான பண மீதிகள் உயர்ந்தளவிலான பெயரளவு மொ.உ.உற்பத்தி வளர்ச்சி, பொருட்கள் மற்றும் பணிகள் மீது செலவழிப்பதற்கான உயர்ந்தளவிலான நாட்டம் போன்ற வடிவிலான மேம்பட்ட பொருளாதார நிலைமைகள் உள்ளடங்கலாக பல்வேறு காரணிகள் மீது தங்கியுள்ளன.

எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய திட்டமிடப்படாத அல்லது அவசர செலவினங்களைப் பூரணப்படுத்தும் பொருட்டு முற்காப்பு வழிமுறையொன்றாகவும் மக்கள் பணத்தைக் கோருவதுடன் இது 2020இல் கொவிட் 19 உலகளாவிய நோய்த்தொற்றினைத் தொடர்ந்து நகர்வு மீதான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்ட காலப்பகுதியில்; எடுத்துக்காட்டப்பட்டது. சில நேரங்களில் மக்கள் ஊக நோக்கங்களுக்காக அதாவது, இன்று பணத்தை வைத்திருப்பதன் மூலம் எதிர்காலத்தில் வேறு ஏதேனும் சொத்துக்களிலும் பார்க்க சிறந்த வருவாய்களை ஈட்டுவதற்காகவும் பணத்தை வைத்திருக்கின்றனர். இருப்பினும், பணத்திற்கான ஊகக் கேள்வியானது வருவாய் வீதம் மற்றும் பணத்தை வைத்திருப்பதற்கான சந்தர்ப்பச் செலவு என்பவற்றில் தங்கியுள்ளது.

இதற்கமைய, வருமானம், வட்டிவீதங்கள், பொருளாதாரத்தின் விலைமட்டம், வைப்பு வீதம், செல்வம், தனிப்பட்ட விருப்பத்தேர்வுகள், கொடுக்கல்வாங்கல் செலவுகள் மற்றும் பொதுமக்களின் கொடுப்பனவு வழக்கங்கள் என்பன உள்ளடங்கலாக பல்வேறு காரணிகளினால் பணத்திற்கான மொத்தக் கேள்வி தளம்பலடைகின்றது. வங்கித்தொழில் வசதிகளிலுள்ள புத்துருவாக்கங்களுடன் வன் பணத்தை வைத்திருப்பதன் முக்கியத்துவம் தற்போது ஓரளவு குறைவடையக் கூடும். ஒட்டுமொத்தமாக, பொதுமக்கள் பணத்திற்கான தங்களது கேள்வியை அதிகரிக்கும் போது, பொருளாதாரத்திற்குப் புதிய பணத்தினை வெளியிடுவதில் நன்கு நிறுவப்பட்ட பன்னாட்டு ரீதியில் ஏற்றுக்கொள்ளக்கூடிய பொறிமுறையொன்றினைப் பின்பற்றும் வேளையில் பொருளாதாரத்தின் சாத்தியமான கேள்வி அமுத்தங்களைக் கண்காணித்து புதிய பணத்திற்கான கேள்வியைப் பூரணப்படுத்துவதற்கான அனைத்து முயற்சிகளையும் மத்திய வங்கி மேற்கொள்கின்றது.

(நாளை தொடரும்)

ஜனக எதிரிசிங்ஹ
பணம் மற்றும் வங்கித்தொழில் பிரிவின் தலைவர்/சிரேஷ்ட பொருளியலாளர்
பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

தவக்காலம் கடவுளின் குரலுக்கு செவிமடுக்கும் காலம்

தவக் காலத்தின் முதலாம் வாரத்தில் பயணிக்கின்றோம். தவக்காலம் என்றவுடன் ஏதோ கவலையோடும், வருத்தத்தோடும் காட்சி கொடுப்பது என்பதல்ல. மாறாக அது நம்பிக்கையின் காலம்.

இறைவனின் இரக்கத்தைச் சுவைக்கும் மகிழ்ச்சியின் காலம். இது வாழ்வின் சிறந்த காலம். இக்காலம் நாம் நடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்த்துச் சிந்தித்து, புதியதொரு பாதையில் அடியெடுக்க செயலாக்கும் காலம். இதுவே ஒப்புரவின் காலம். பாவத்தால் பிளவுபட்ட உறவைச் சரிபார்த்து, நம்மோடும், உலகோடும், பிறரோடும், வாழ்வோடும், இறைவனோடும் ஒப்புரவாகும் காலம். மகிழ்ச்சி என்பது மனதில் உள்ளது. உலகப் பொருட்களில் அல்ல. எனவே நம் வாழ்வை நாம் கட்டுப்படுத்தி, உலக மாயையின் தூண்டுதலுக்கு இல்லை என்றுபதில் சொல்லும் காலம். அப்படிச் சொல்வதால் சக்தியும், ஆற்றலும், தன்னம்பிக்கையும் நம்மில் உண்டாகும். சர்க்கரை நோய் உள்ளவர் சர்க்கரை வேண்டாம் எனச் சொல்லக் கற்றுக்கொள்கிறார். கொழுப்புச் சத்துள்ளவர் இறைச்சியை, முட்டைகளைத் தள்ளி வைக்கக் கற்றுக் கொள்கிறார். புற்றுநோய் உள்ளவர் குடிக்க, புகைக்க மறுக்கிறார். ஏன்! வாழ வேண்டும் என்பதற்காக. அதேபோலத்தான், மகிழ்ச்சியோடு, அமைதியோடு வாழ வேண்டிய மனிதர் பாவத்திற்கு முடியாது, இல்லை என்று சொல்ல, முடிவெடுக்க வேண்டிய காலம் இது. கடவுளின் குரலுக்குச் செவிமடுக்கும் காலம்.

தவக்காலத்தின் முதல் ஞாயிறில் சோதனைகளில் விழாது நம்மைக் காக்க வேண்டும் என்ற அறைகூவலை திருஅவை நமக்கு வாசகங்கள் மூலம் விடுக்கின்றது.

ஞாயிறு வாசகங்களில் இரு மனிதர்களை நாம் ஒப்பிட்டு சிந்திக்கின்றோம். முதலாவது ஆதாம். ஆதாம் கடவுளால் படைக்கப்பட்டவர் என்பதை விட கடவுளால் மிகவும் அன்பு செய்யப்பட்டவர் என்றே சொல்ல வேண்டும். இந்த பூமியின் படைப்புக்கள்

அனைத்தையும் ஆண்டு அனுபவிக்க அவருக்கு அதிகாரம் அளித்தார் கடவுள்.

எல்லா அதிகாரத்தைக் கொடுத்தாலும் ஒருசிறு தடை. ஒரு பழத்தை உண்ணக்கூடாது என்பது அது. அந்த சிறு தடையை மனித மீட்புக்கே பெரிய தடையாக மாற்றினான் அலகை.

மனித மனம் தன்னைச் சுற்றி எத்தனையோ நிறைவானவை நல்லவை இருந்தாலும் அதையும் தாண்டி தன்னிடமிருந்து மறைக்கப்பட்டவற்றை தடை செய்யபட்டவற்றை தேடிச் செல்வதுதான் வழக்கம்.

உதாரணமாக புயல் எச்சரிக்கை. கடலுக்கு செல்லா தீர்கள் என்று எச்சரிக்கப்பட்ட போதும் அதை மீறிச் சென்று கடலில் இறங்கி பலர் உயிரை இழந்த நிகழ்வுகள் பலவற்றை நாம் கேட்டதுண்டு. அதே போலத் தான் அலகையின் மாய வலையில் சிக்கி ஆதாம் கடவுள் தந்த எச்சரிக்கையை மீறியதால் மீட்பை இழந்தான்.

இரண்டாவதாக நம் ஆண்டவர் இயேசு. தன் பணி வாழ்வைத் தொடங்கும் முன் நாற்பது நாட்கள் நோன்பிருந்தார். நோன்பிருந்த சமயத்தில் அவர் முழு மனிதனாய் இருந்தார். இவ்வாய்ப்பை பயன்படுத்திய அலகை அவரை மும்முறை சோதித்தான். அவருடைய தேவைகளைச் சுட்டிக்காட்டி, அவருடைய கடவுளியல்பை நினைவூட்டி அவரைச் சோதித்தான். ஆனால் இயேசுவோ சோதனையில் விழவில்லை. அவர் இறைவார்த்தையை பலமாக பிடித்துக் கொண்டார்.

நம்மைத் தேடி வரும் சோதனைகளெல்லாம் கண்களுக்கு மிக அழகாகவும் மனதிற்கு மகிழ்ச்சியளிப்பதாகவும் தோன்றும். அதன் விளைவுகளோ நம் நிறை மகிழ்வை நிம்மதியை நம்மிடமிருந்து பறித்துச் சென்றுவிடும் என்பதே உண்மை.

இச்சோதனைகளை ஆதிப்பெற்றோர் போல மேலோட்டமாக புரிந்து கொண்டு அதில் விழுந்தால்

அருட்பணி எல்.எக்ஸ்.ஜெரோம்

இறை அருளை நாம் இழந்துவிடுவோம். இயேசுவைப் போல ஆழமாகப் புரிந்துகொண்டு நம்மைக் காத்துக்கொண்டால் மீட்பு உறுதி. இச்சோதனைகளில் விழாது நம்மை காத்துக்கொள்ள இறைநம்பிக்கையும் இறைவார்த்தையின் மீது நமக்குள்ள பற்றும் பெரிதும் துணையாய் இருக்கின்றன.

சோதனைகளிலிருந்து விடுதலை பெற நாம் இயேசுவின் மனநிலையை கொண்டிருக்க வேண்டும். இயேசு இறை மகனாக இருந்த போதிலும் தந்தையாம் கடவுளுக்கு கீழ்ப்படிபவராக இருந்தார். சோதனையை வென்றிட கடவுளுக்கு நாம் கீழ்ப்படிய வேண்டும். தன்னை சோதித்த அலகைக்கு இறைமகன் இயேசு இறை வார்த்தையின் வழியாக பதிலடி கொடுத்தார்.

நம்முடைய வாழ்வை இறைவார்த்தையில் வேரூன்றிய வாழ்வாக அமைக்கின்ற பொழுது சோதனைகளை வெல்ல முடியும். இயேசு பாவம் தவிர நம்மைப் போல மனிதராக வாழ்ந்து தூய வாழ்வுக்கு சான்று பகந்தார். அதுபோல நாமும் பாவத்தை தூண்டக்கூடிய சூழலை விட்டு விட்டு தூய்மையான வாழ்வுக்கு வழிகாட்டும் சூழலில் பயணிக்கும் பொழுது சோதனைகளை வெல்ல முடியும்.

இயேசு இறைமகனாக இருந்த போதிலும் இறைவேண்டுதலிலும் நோன்பிலும் வேரூன்றி இருந்தார். நம்முடைய வாழ்க்கையிலும் இறைவேண்டலில் நிலைத்திருந்து உண்ணா நோன்பில் திளைத்திருக்கும் பொழுது சோதனைகளை வெல்ல முடியும்.

நம்முடைய பயணத்தை ஆன்மாவை இலக்காக்கக் கொண்டு பயணிக்க முயற்சி செய்யும் பொழுது சோதனைகளை வெல்ல முடியும். எனவே உடல் உள ஆன்மா சார்ந்த சோதனைகளை வெல்ல நாம் இறைவனின் திராட்சைச் செடியில் கொடிகளாக இணைவோம். அப்பொழுது நிச்சயமாக நாம் கடவுளுக்கு உகந்த மனிதர்களாக வாழ முடியும். நிறைவானது வரும் பொழுது குறைவானது தானாக போய்விடும்.

எனவே கடவுளுக்கு உகந்த நிறைவான செயல்பாடுகளில் இணைந்து சோதனை என்ற குறைகளை கலைந்திட தேவையான அருளை வேண்டுவோம். சோதனைகளை வென்றிட இறைவனின் கரத்தையும் அன்னை மரியாளின் கரத்தையும் பற்றிப் பிடித்து புனிதர்களின் தோழமையோடு பயணமாவோம். அதற்குத் தேவையான அருளை வேண்டுவோம்.

கிறிஸ்தவ மஞ்சரி

லோரன்ஸ் செல்வா

திறந்தவெளி பெரிய சிலுவைப்பாதை

திறந்தவெளி பெரிய சிலுவைப்பாதை புனித ஜோசப் வாஸ் மன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற பெரிய திறந்த வெளி சிலுவைப்பாதை நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக நடைபெற்றது.கொழும்பு புதுச் செட்டித் தெரு புனித வியாகுலமாதா ஆலயத்தில் லிருந்து புறப்பட்ட சிலுவைப்பாதை தியான பவனி கொட்டாஞ்சேனை புனித லூசியாள் பேராலயத்தை சென்றடைந்தது. பேராலய முன்றலில் கொழும்பு உயர்மறை மாவட்ட துணை ஆயர் பேரருட்திரு என்டன் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் திருப்பலி பூசை ஒப்புக்கொடுக்கப்பட்டது. இந்த திறந்தவெளி சிலுவைப் பாதையில் இம்முறை பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (படங்கள்: மத்தியூ ஜேசுதாசன், வடகொழும்பு தினகரன் நிருபர்)

புனித பேதுரு தலைமைப்பீட திருவிழா

முன்னாள் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட்டின் ஒலிப்பதிவுகள் வத்திக்கான் இணையதளத்தில்

மறைந்த முன்னாள் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் அவர்கள் தனது தலைமைத்துவப் பணியைத் துறந்த நாளான பெப்ரவரி 11 ஆம் திகதியையொட்டி அவரது நேர்காணல்கள், ஒலிப்பதிவுகள் அடங்கிய மூன்று பிரிவுகள் வத்திக்கான் இணையதளத்தில் மக்களின் பயன்பாட்டிற்காக வெளியிடப்பட்டுள்ளன.

2013ஆம் ஆண்டு பெப்ரவரி 11ஆம் திகதி வத்திக்கானின் கூடியிருந்த கர்தினால்கள் முன் தனது தலைமைத் துவப் பொறுப்பை துறக்கும் முடிவை இலத்தீன் மொழியில் எடுத்துரைத்த மறைந்த முன்னாள் திருத்தந்தை 16 ஆம் பெனடிக்ட் அவர்கள் பதவியைத் துறந்த 10 ஆண்டுகள் நினைவாக "Il pastore Benedetto" அதாவது, ஆயர் பெனடிக்ட் என்னும் புதிய ஒலிப்பதிவுத்தொடர் வத்திக்கான் வானொலியால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சிறந்த இறையியலாளர், பணிவான அருட்பணியாளர் மற்றும் அன்பான மனிதரான திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ட் தனது பணித்துறப்பின் வழியாகத் திருஅவையின் வரலாற்றை மாற்றியமைத்தவர்.

திருத்தூதர் பேதுருவின் வழித்தோன்றலாக திருஅவையை நன்கு வழிநடத்தியவர். இத்தகைய முன்னாள் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் அவர்கள், தனது தலைமைத்துவப் பணியை உள்மனச் சுதந்திரத்துடன் துறந்த தருணங்களை மீட்டெடுக்கவும் நேர்காணல்கள் மற்றும் பங்களிப்புகள் வழியாக முன்னாள் திருத்தந்தையாக இப்பத்தாண்டுகளில் அவர் ஆற்றிய பணிகளையும் இவ் ஒலிப்பதிவு எடுத்துரைக்கின்றது.

திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் அவர்களின் இறுதி நேரங்களில் உடன் இருந்த அவரது செயலர் கர்தினால் Georg G□nswein, திருத்தந்தையின் வாழ்க்கையை வரலாற்றுக் குறிப்பாக எடுத்துரைத்த Ansa பத்திரிக்கையாளர் Giovanna Chirri, மற்றும் Elio Guerriero, ஆகியோரின் குறிப்புக்களும், அவர் பணித்துறப்புப் பற்றி அறிவித்த நாளன்று கர்தினால்களுக்கு ஆன்மிகப்பயிற்சிக் கருத்துரைகளை வழங்கிய கர்தினால் Gianfranco Ravasi அவர்களின் கருத்துக்களும் இவ்வொலிப்பதிவில் இடம்பெற்றுள்ளன.

இயேசு, பிலிப்புச் செசரியா பகுதிக்குச் சென்றார். அவர் தம் சீடரை நோக்கி,

'மானிட மகன் யாரென்று மக்கள் சொல்கிறார்கள்?' என்று கேட்டார் சீமோன் பேதுரு.

'நீர் மெசியா, வாழும் கடவுளின் மகன்' என்று உரைத்தார். அதற்கு இயேசு, ''யோனாவின் மகனான சீமோனே உன் பெயர் பேதுரு; இந்தப் பாறையின்மேல் என் திருச்சபையைக் கட்டுவேன்...' என்றார்'' (மத்தேயு 16:13,1618)

நாட்டுப் பகுதியின் வடக்கில் இருந்தது அகுஸ்துஸ். சீசர் என்னும் உரோமைப் பேரரசன் அந் நகரைப் பெரிய ஏரோதுக்குக் கொடுத்திருந்தார். ஏரோதின் மகன் பிலிப்பு அந்நகரை விரித்துக் கட்டி, அதற்குத் தன் பெயரையும் சீசரின் பெயரையும் இணைத்து ''பிலிப்புச் செசரியா'' என்று புதிய பெயர் வைத்தார் (மத் 16:13).

இயேசு தம் சீடரை நோக்கி, ''மானிடமகன் யாரென்று மக்கள் சொல்கிறார்கள்?'' என்றொரு கேள்வியைக் கேட்கிறார் (மத் 13:13).

இயேசு தம்மைப் பற்றிப் பேசும்போது ''மானிடமகன்'' என்கிறார். வேறு யாரும் அவரை அப்பெயர் சொல்லிக் கூப்பிடவில்லை.

''மானிடமகன்'' என்னும் சொல்லுக்கு என்ன பொருள்? மத்தேயு நற்செய்தியில் பல இடங்களில் இயேசு தம்மை இவ்வாறு அடையாளம் காட்டுகிறார்.

. இயேசு தாம் துன்புற்றுச் சிலுவையில் அறையப்படுவதை முன்னறிவித்த வேளைகளில் தம்மை ''மானிடமகன்'' என்னும் சொல்லால் குறிப்பிடுகிறார் (மத். 12:40). இறுதிக் காலத்தில் தாம் நடுவராக வரப்போவதைக் குறிப்பிடும்போதும் ''மானிடமகன்'' பற்றிப் பேசுகிறார் ''மானிடமகன்'' என்று தம்மை அழைத்த

இயேசு தாம் மனித குலத்தோடு நெருங்கி ஒன்றித்திருப்பதை அப்பெயர் மூலம் வெளிப்படுத்தினார்.

உண்மையிலேயே அவர் மனித குலத்தின் பிரதிநிதியாகக் கடவுள்முன் நிற்கின்றார். மனித குலத்திற்குப் புதிய வாழ்வு வழங்க அவர் தம்மையை கையளிக்கின்றார்.

தாம் யார் என இயேசு கேட்ட கேள்விக்கு பேதுரு பதிலளிக்கிறார்: ''நீர் மெசியா, வாழும் கடவுளின் மகன்'' (மத் 16:1617). இயேசு பட்டம் பதவி தேடிவருகின்ற மெசியா அல்ல; மாறாக, துன்புற்று இறக்கப் போகின்ற மெசியா (மத் 16:21).

இயேசு பேதுருவைப் ''பாறை'' என அழைக்கிறார். பேதுரு என்னும் கிரேக்கச் சொல்லின் பொருள் அதுவே. அரமேய மொழியில் ''கேபா''. பேதுரு பாறைபோல உறுதியாய் இருக்க வேண்டும். கிறிஸ்துவில் நம்பிக்கை கொள்ளும் நாம் பாறைபோல நிலைத்திருக்க வேண்டும்.

நம் நம்பிக்கை அசைவுற்றுக் குலைந்துவிடாமல் நாம் பிடிப்புடன் இருக்க அழைக்கப்படுகிறோம். கிறிஸ்துவில் நம்பிக்கை கொள்ளும் மக்கள் குழுவாகிய திருச்சபை இயேசு என்னும் பாறைமேல் கட்டப்பட்டிருப்பதால் நாமும் பாறைபோல் உறுதியாயிருக்க நமக்கு அருள் வழங்கப்படுகிறது.

எல்.எஸ்.

யானைக்கால் நோயாளர்களின் எண்ணிக்கையில் திடீர் அதிகரிப்பு

எட்டு மாவட்டங்களில் நோய் பரவும் அபாயம்

நாட்டில்,கடந்த வருடத்தில் மாத்திரம் 400 புதிய யானைக்கால் நோயாளர்கள் இனங் காணப்பட்டுள்ளதாக,யானைக் கால் நோய்க் கட்டுப்பாட்டு அமைப்பு அறி வித்துள்ளது.

நோயைக் கட்டுப்படுத்தும் வேலைத் திட்டத்தின் கீழ் வீடுகளுக்கு வரும் சுகா தாரத் துறை அதிகாரிகளுக்கு மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று யானைக்கால் நோய்க் கட்டுப்பாட்டு அமைப்பின் பணிப்பாளர் மருத்துவர் உதய ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அனைத்து சுகாதார அதிகாரிகளும் உத் தியோகபூர்வ சீருடை மற்றும் உத்தியோக

பூர்வ அடையாள அட்டைகளுடன் வீடுக ளுக்கு வருகை தருவார்கள் என்றும் பணிப் பாளர் குறிப்பிட்டார்.

கொழும்பு, களுத்துறை, மாத்தறை, காலி, ஹம்பாந்தோட்டை, கம்பஹா, புத்தளம் மற்றும் குருநாகல் மாவட்டங் களில் இந்நோய் தொடர்ந்து பரவி வரு கின்றது.

கடந்த வருடத்தில் மாத்திரம் 400 புதிய நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ள னர். 2030ஆம் ஆண்டளவில் இந்நோயை இலங்கையிலிருந்து ஒழிப்பது அரசாங்கத் தின் எதிர்பார்ப்பாகும்.

நோயாளிகளைக் கண்ட றிந்து சிகிச்சை அளிப்பதற்காக இரத்தப் பரிசோதனைகள் தொடர்ந்தும் மேற் கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரி விக்கப்பட்டுள்ளது.

புத்தளம் இந்துக்கல்லூரி நூலகத்திற்கு ஒரு தொகை நூல்களை பாடசாலை அதிபர் பீ.ஆர். தம்பித்துரையிடம் இலக் கிய புரவலர் ஹாசிம் உமர் வழங்கி வைப்பதையும் அருகில் தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தெ.செந்தில் வேலவர் பிரதி ஆசிரியைகளான டீ.சிவதர்சன், வீ.லோகேஸ்வரி ஆகியோர் உடன் காணப்படுகிறார்கள்.

அரசாங்க தகவல் திணைக்களமும், மெட்ரோ பொலிட்டன் நிறுவனமும் இணைந்து கெமரா தொழில்நுட்பம் தொடர்பான செயலமர்வு ஒன்றை அமைச்சர் பந்துல குணவர் தனவின் தலைமையில் நடாத்தியது.தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நடந்த இந்தச் செயலமர்வில், கலந்து கொண்ட புகைப்படக் கலைஞர்களுக்கு அமைச்சர் சான்றி தழ்களை வழங்குவதைப் படத்தில் காணலாம்.

குழந்தைகளை பாலத்தில் வைத்துவிட்டு ஆற்றில் பாய்ந்து தற்கொலைக்கு முயற்சி

தெய்வாதீனமாக காப்பாற்றப்பட்ட பெண் ஆஸ்பத்திரியில்

லோரன்ஸ் செல்வநாயகம்

குழந்தைகளை பாலத்தின் மேல் வைத்துவிட்டு, ஆற்றில் குதித்து தற்கொலை செய்ய முயன்ற தாயை, இளைஞர் ஒருவர் காப்பாற்றி உள்ளார்.குடும்பத் தகராறு காரண மாகவே இப்பெண்,இவ்விபரீத முடிவை எடுத்திருந்தார்.

தமது 18 மாத குழந்தை மற்றும் 9 வயது மகனையும் பாலத்தின் மேல் வைத்துவிட்டு ஆற்றில் குதித்த இப்பெண்ணை,ஆற்றில் நீராடிக் கொண்டிருந்த இணைஞர் காப்பாற் றினார்.

இச்சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது, தமது இரண்டு பிள் ளைகளையும் பாலத்தின் மேல் பகுதியில் வைத்துவிட்டு பெந்தர ஆற்றில் குதித்து பெண்ணொருவர் தற்கொலை செய்துகொள்ள முயற் சித்துள்ளார்.

பலாங்கொடை பகுதியைச் சேர்ந்த மேற்படி பெண்மணி எல்பிட்டிய பகுதி நபரொருவரை திருமணம் முடித்துள்ள நிலையில், இருவருக் குமிடையில் குடும்பத் தகராறு ஏற் பட்டுள்ளது. இதனாலே, மேற்படி பெண் ஆற்றில் குதித்து தற்கொ லைசெய்ய முயற்சித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

த பாதுகாப்பு வேலியினூடாக 40 அடி உயரத்திலிருந்து இவர் ஆற்றில் பாய்ந்துள்ளதாக பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

அப்பகுதியில் நீர் விளையாட்டில் ஈடுபட்டிருந்த இளைஞரொருவரே ஆற்றில் அடித்துச்செல்லப்பட்ட மேற்படி பெண்ணை காப்பாற்றி னார். பலப்பிட்டிய ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இப்பெண், மேலதிக சிகிச்சைக்காக காலி கரா பிட்டிய வைத்தியசாலைக்கு மாற்றப் பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

குறித்த தாயின் இரு பிள்ளைகளும் அளுத்கம பொலிஸில் ஒப்படைக் கப்பட்டுள்ளனர். அவர்கள் இருவ ரையும் களுத்துறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின், சிறுவர் பாதுகாப்பு நன்னடத்தை பிரிவில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்துள் ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் காயமடைந்த நிவித்திகல வேட்பாளர் வைத்தியசாலையில் மரணம்

லோரன்ஸ் செல்வநாயகம்

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது காயமடைந்த நிவித்திகல பிரதேச வேட்பாளர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச் சைபெற்று வந்த நிலையில் நேற்று மரணமடைந்துள்ளார்.

அதுதொடர்பில் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பேச் சாளர் தெரிவிக்கையில், மேற்படி நபருக்கு ஏற்பட்டிருந்த காயம் காரணமாக அவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதித்து சிகிச்சை வழங்கப்பட்டுவந்ததாகவும் அந்த நிலையிலேயே அவர் நேற்று மரண மடைந்ததாகவும் அவர் தெரிவித் துள்ளார்.

காயமடைந்த 28 பேர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டதாக வும் அவர்களில் சிலர் சிகிச்சையின் பின்னர் வீடு திரும்பியுள்ளதாகவும் மேலும் சிலர் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருவதாகவும் அவர் தெரி வித்துள்ளார்.

நிவித்திகல பிரதேசத்தில் தேசிய மக்கள் சக்தி வேட்பாளரான நிமல் அமரசிறி என்பவரே இவ்வாறு மர ணமடைந்துள்ளதாகவும் தெரிய வரு கிறது.

அரச நிறுவனங்களின் கொடுப்பனவுகள் கட்டணங்கள் டிஜிட்டல் மயப்படுத்தப்படும்

இராஜாங்க அமைச்சர் விஷேட அறிவிப்பு

அரச நிறுவனங்களின் சகல கொடுப்பனவுகள், கட்டணங்களை அடுத்த வருடம் மார்ச்சிலிருந்து, டிஜிட்டல் இலத்திரனியனில் நடை முறைபப்படுத்த தீர்மானித்துள் ளதாக தொழினுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தெரிவித் துள்ளார்.

நாட்டின் புதிய இணையப்பாது காப்பு மூலோபாயத் திட்டம் தொடர் பாக இலங்கை கணினி அவசர பதில் மன்றமும், உலக வங்கியும் இணைந்து, கொழும்பில் நடத்திய செயலமர்வில் கலந்துகொண்ட போதே கனக ஹேரத் இதனை தெரி வித்தார்

இங்கு கருத்துத் தெரிவித்த அவர் கூறியதாவது,

இலத்திரனியல் குறித்த வழிகாட் டுதல்கள், இவ்வாண்டு செப்டம்ப ரில், அரச நிறுவனங்களுக்கு வழங் கப்படவுள்ளன.

இதற்கேற்ப,டிஜிட்டல் மாற்றத் திற்குத் தேவையான சகல நடவடிக் கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

மேலும், இணையப் பாதுகாப்புச் சட்டமும் இந்த ஆண்டுக்குள் நாடா ளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். தேசிய தகவல் மற்றும் சைபர் பாது காப்பு மூலோபாயத் திட்டத்தின் கீழ் இச்சட்டம் கொண்டுவரப்படவுள் ளது.

இதன் மூலம் தகவல் மற்றும் சைபர் பாதுகாப்பு ஒழுங்குமுறை ஆணையத்தை உருவாக்கவும், டிஜிட்டல் முறைகளை சிலர், தவறா கப் பயன்படுத்துவதைக் கட்டுப்ப டுத்தவும் முடியும்.

முக்கியமான டிஜிட்டல் உட் கட்டமைப்பைப் பாதுகாக்கத் தேவையான சட்டக் கட்டமைப்பை உருவாக்கவும் இது உதவும் என்றும் இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தெரிவித்தார்.

ஏப்ரல் புதுவருடத்துடன் கியூ.ஆர் முறைக்கு முடிவு

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எதிர்வு கூறல்

எரிபொருள் விநியோகத்திறகென நாட்டில் நடைமுறையிலுள்ள கியூ. ஆர் முறை தொடர்பில் புதிய அறி விப்பு வெளியாகியுள்ளது.

இதனடிப்படையில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் (10)ஆம் திகதிக்குள் கியூ.ஆர் குறியீட்டு முறையை நீக்க திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவிக் கப்பட்டுள்ளது. இது தொடர்பில், பெட்ரோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது. அந்த அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதா வது, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங் கவின் ஆலோசனைக்கமைய சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டுக்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகி றது. சபுகஸ்கந்த சுத்திகரிப்பு நிலை யத்தின் தொடர்ச்சியான செயற்பாடு காரணமாக, எரிபொருள் விநியோ கத்தை தொடர்ந்தும் மேற்கொள்ள முடிந்துள்ளதாகவும் அந்த அறிக்கை யில் குறிப்பிடப்பட்டுள்ளது.

QR முறைமையை...

பகுப்பாய்வு செய்யப்படுவதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள் ளார். அடுத்த சில மாதங்களில், நிதி அமைச்சு மற்றும் பிற பங்குதாரர்களு டன் கலந்தாலோசித்து இது குறித்த தீர்மானம் எடுக்கப்படவுள்ளதாக வும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

முன்னதாக தேசிய எரிபொருள் அனுமதி அட்டை முறைமை ஏப்ரல் மாதத்துடன் நீக்கப்படவுள்ளதாக தக வல்கள் வெளியாகியிருந்தன. இந் நிலையில், இதற்கு பதிலளிக்கும் வகையிலே, வலுசக்தி அமைச்சர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

பௌத்த மற்றும் பாளி... 03ஆம் பக்கத் தொடர்

தெரிவித்துள்ளார்.

அதேவேளை, ஏனைய வருட மாணவர்களுக்கு எதிர்வரும் ஜூன் 05 ஆம் திகதியளவில் விடுதி வசதிகளைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்ப டுமென்றும் அவர் மேலும் தெரி வித்துள்ளார்.

மலையக மக்களுக்கு...

அவர் குறிப்பிட்டதாவது,

மலையக மக்களில் ஒரு தொகு தியினர், போஷாக்கு குறைவாக காணப்படுகின்றனர்.எனவே,இவர்க ளின் உடல் ஆரோக்கியத்தை பேணு வதற்கு அரசாங்கம் விஷேட கவனம் செலுத்துதல் அவசியம்.

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ள முட்டைகளை மலையக மக்களுக்கு நிவாரண விலையில் வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.இதில்,அ ரசாங்கம் கூடிய கவனம் செலுத்த வேண்டும் என்றும், பாராளுமன்ற உறுப்பினர் வீ இராகிருஷ்ணன் குறிப் பிட்டார்.

இலங்கைக்கு IFC...

உட்பட 30% இறக்குமதிக்கு நிதியளிக்கும் வசதியை, மூன்று தனியார் வங்கிகள் பெறும் என்று சர்வதேச நிதியளிப்பு கூட்டுத்தாப னம் அறிக்கையொன்றில் தெரிவித் துள்ளது.

இந்த நிதியுதவி, முதலீட்டாளர் சமூகத்தில் நம்பிக்கையை அதிகரிப் பதுடன், இலங்கைப் பொருளாதா ரத்திற்கு ஆதரவாக புதிய மூலதன வரவுகளை ஈர்க்கும் எனவும் தாம் எதிர்பார்ப்பதாக தெற்காசியாவுக் கான நிதியியல் நிறுவகங்கள் குழு மத்தின், சர்வதேச நிதியளிப்பு கூட் டுத்தாபன முகாமையாளர் ஜூன் பார்க் தெரிவித்துள்ளார்.

ஐ.ம,ச தாக்கல்...

உத்தரவிட்டுள்ளது.

இதன்படி எதிர்வரும் மார்ச் (03) குறித்த மனு பரிசீலனைக்கு அழைக் கப்படவுள்ளது.

மனுவை எதிர்வரும் மார்ச் மாதம் (09) ஆம் திகதிக்கு முன்னர் பரிசீ லனைக்கு எடுத்துக்கொள்ளுமாறு மனுதாரர் தரப்பு சார்பில் ஜனாதி பதி சட்டத்தரணி உபுல் ஜயசூரிய விடுத்த கோரிக்கைக்கு அமைய இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள் ளது.

இந்த மனு, நீதியரசர்கள்எஸ். துரைராஜா, யசந்த கோதாகொட மற்றும் பிரியந்த பெர்னாண்டோ ஆகிய மூவரடங்கிய உயர்நீதிமன்ற அமர்வு முன்னிலையில், நேற்று காலை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

நிதியமைச்சின் செயலாளர், தேர் தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் அடங்கிய குழுவினர் பிரதிவாதிகளாக குறிப்பி டப்பட்டுள்ளனர்.

சம்பந்தப்பட்ட தீர்ப்பின் மூலம் பிரதிவாதிகள் பொதுமக்களின் அடிப்படை உரிமைகளை மீறியுள் ளனர் என்று அறிவிக்கும் நீதிமன்ற உத்தரவு, மனுவின் மூலம் கோரப் பட்டுள்ளது.

சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு...

இதன்படி, புதிய உறுப்பினர்களை நியமிப்பது தொடர்பான ஆரம்ப கட்ட கலந்துரையாடல், இவ்வாரம் நடைபெறவுள்ளது.

இதுவரை பெறப்பட்ட 1,600க்கும் மேற்பட்ட விண்ணப்பங்களில்,

முதற்கட்ட தகுதிப் பட்டியலை தயாரித்து உறுப்பினர்கள் தேர்ந்தெ டுக்கப்படவுள்ளனர்.

அரசியலமைப்பு பேரவையின் கூட்டத்தின் பின்னர், இது தொடர் பான இறுதி முடிவு எடுக்கப்படவுள் ளது. அரசியலைப்பு பேரவையின் கூட்டம் இன்று (28) செவ்வாய்கி ழமை இடம்பெறவுள்ள போதி லும்,இதுபற்றிய இறுதி முடிவுகள் எடுக்கப்படவில்லை எனவும் தெரி விக்கப்பட்டுள்ளது.

மார்ச் 19 க்குள்...

கஷ்டப்படுகின்றனர். வாழ்க்கைச் செலவை சமாளிக்க முடியாமல் பலர்,விபரீத முடிவுகளை எடுக்கும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான சூழ்நிலையில் உள் ளூராட்சித் தேர்தலைத் திசை திருப்ப பல சதிகள் தீட்டப்படுகின்றன.

அரசாங்கம் சார்பிலும், ஜனாதி பதி சார்பிலும் இதற்கான முயற் சிகள் நடைபெற்றாலும், தேர்தல் கட்டாயம் நடத்தப்பட வேண்டும். இந்த உள்ளூராட்சி மன்ற தேர்தல் மிகவும் முக்கியமான ஒரு கருத்துக் கணிப்பாக அனைவராலும் நோக் கப்படுகின்றது. நாட்டு மக்களின் அரசியல் நோக்கம் என்ன என்பது இந்த தேர்தல் ஊடாக வெளிப்பட வுள்ளது.

தேர்தல்களை நடத்தாது பிற்போ டுவது நாட்டினுடைய சுபாவத்தை மாற்றிவிடும்.

உள்ளூராட்சி தேர்தல்கள் சட்டபூர் வமாக அறிவிக்கப்பட்டுள்ளன.என வே,அறிவிக்கப்பட்டது போன்று, தேர்தல் நடத்தப்படுவது அவசியம் என்றார்.

ஐ.நா மனித உரிமைகள்...

உட்பட ஆறு நாடுகளின் நிலமை கள் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதற்கிணங்க இம்முறை இலங்கை, எகிப்து, பனாமா, சாம்பியா, பெரு,துர்க்மெனிஸ்தான் ஆகிய நாடுகள் தொடர்பான அறிக் கைகள் மீளாய்வுக்கு உட்படுத்தப் பட உள்ளன.

இந்த மீளாய்வை 18 சர்வதேச சுயாதீன நிபுணர்கள் மேற்கொள்ள வுள்ளனர்.

அதேவேளை, மனித உரிமை மீறல்கள், பாலின அடிப்படையி லான வன்முறைகள், நீதித்துறை சுதந்திரம் மற்றும் இலங்கையின் அவசரகால நிலைகள் மற்றும் பயங் கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள், நீதி மற்றும் நிர்வாகம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் இம்முறை பொது உரையாடல்கள் மூலமான விவாதங்கள் நடைபெற வுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்திய கடற்படை கப்பல்...

101 மீட்டர் நீளமுள்ள இந்தக் கடல் ரோந்துக் கப்பலில் 106 பணி யாளர்கள் உள்ளனர். இதற்கிடை யில், கப்பலின் கட்டளை அதிகாரி கொமாண்டர் பிரணவ் ஆனந்த் நேற்று காலை மேற்கு கடற்படை கட்டளைத் தலைமையகத்தில் மேற்கு கடற்படை தளபதி ரியர் அட் மிரல் சுரேஷ் டி சில்வாவை சந்தித் தார்.

மேலும், காலி தியகிதுல்கந்த ஆரம்பப் பாடசாலையின் சிறுவர்கள் குழுவொன்று கப்பலுக்கு வருகை தரவுள்ளதுடன், இந்திய கடற்படை யினரால் வழங்கப்பட்ட பாடசாலை உபகரணங்களை அந்த சிறுவர்களுக் கும் கையளிக்க ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன.

நாட்டில் தங்கியிருக்கும் காலப்ப குதியில், இரு கடற்படையினருக் கும் இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கும், சில சுற்று லாத் தலங்களைப் பார்வையிடுவ தற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. இலங்கை கடற்படையால் ஏற்பாடு செய்யப்பட்ட பல நிகழ்ச்சிகளிலும் கப்பலின் பணியாளர்கள் பங்கேற்க வுள்ளனர்.

தனது உத்தியோகபூர்வ விஜ யத்தை முடித்துக் கொண்டு, 'INS சுகன்யா' மார்ச் (01) இலங்கையை விட்டுப் புறப்படவுள்ளது. மேலும் கொழும்பிலிருந்து இலங்கை கடற் படையின் கப்பலுடன் பயிற்சியில் (PASSEX) ஈடுபடுவார்கள் என எதிர் பார்க்கப்படுகிறது.

ஆதரவற்றோர் இல்லத்தில் ...

நிலையத்தில் பணியாற்றுபவர் எனத் தெரியவந்துள்ளது.தனது மனைவி குறித்த சிறுவர் இல்லத் தில் பராமரிப்பாளராக பணியாற்றி வந்துள்ள நிலையிலே,இவர்,இச் செயலைப் புரிந்துள்ளதகத் தெரிய வருகிறது. கொடகவெல பிரதேச செயலகத்திற்கு கிடைத்த இரக சிய தகவலையடுத்து, இரத்தின புரி காவல்துறையினரால் கடந்த (24) இவர் கைது செய்யப்பட்டார். இச்சம்பவம் வெளிச்சத்துக்கு வந் ததையடுத்து,குறித்த சிறுவர் இல் லத்தின் பராமரிப்பாளரான, சந்தே கநபரின் மனைவி பணியிலிருந்து நீக்கப்பட்டார். இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்ட சிறுமி கஹவத்தை வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளதாக காவல்துறையினர் தெரிவிக்கின்றனர்.

சகல ஆவணங்களையும்...

கொழும்பு மேலதிக நீதவான் ராஜீந்திர ஜயசூரியவினால் நியமிக் கப்பட்டது.

தடயவியல் மருத்துவம் தொடர் பான நிபுணர் பேராசிரியர் அசேல மெண்டிஸ் தலைமையிலான மூன்று பேராசிரியர்கள் மற்றும் சட்ட வைத்திய அதிகாரி வி.ஆர். ருவன் புர தலைமையிலான சட்ட வைத்திய நிபுணர்கள் இந்தக் குழாமில் உள்ள டங்குகின்றனர்.

குற்றவியல் சட்டத்தின் 373 ஆவது பிரிவின் கீழ், நீதிமன்றத்திற்கு வழங் கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகா ரம் இக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. மேற்படி இக்குழுவிடம் தினேஸ் ஷாப்டரின் மரணம் தொடர்பாக நீதிமன்றிடம் உள்ள சகல அறிக் கைகளையும் ஒப்படைக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் நீதி மன்றத்தின் பிரதான பதிவாளருக்கு மேலதிக நீதவான் உத்தரவிட்டுள் ளார்.

இதன்படி, தினேஷ் ஷாப்டரின் பிரேத பரிசோதனை அறிக்கை மற்றும் மரணித்தவர் தொடர்பில் மனநல நிபுணர் நீல் பெர்னாண்டோ நீதிமன்றில் சமர்ப்பித்த தடயவியல் பிரேத பரிசோதனை அறிக்கை உள் ளிட்ட சகல ஆவணங்களையும் கையளிக்குமாறு உத்தரவிடப்பட் டுள்ளது.

இதன்படி, இந்த வழக்கு எதிர் வரும் மார்ச் (14) மீண்டும் விசா ரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட வுள்ளது.

கடன் பெற முடியாதபோது...

நிலையில் வருடத்திற்கு ஒரு முறை பணத்தை அச்சடித்து வந்த னர்.

கடந்த அரசாங்கங்கள் உள்நாட் டிலும் சர்வதேச அளவிலும் கடன் களை பெற்றன.

"கடன்கள் போதுமானதாக இல் லாதபோது, தானாகவே பணத்தை ஆட்சியாளர்கள் அச்சிடத் தொடங்கி னர். நாடு திவாலாகிவிட்டதாகவும், கடனைச் செலுத்த முடியாது என்றும் ஏற்கனவே அறிவித்ததால், எந்த நாட் டிலும் கடன் பெற முடியாத நிலை, இன்று ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

"இப்போது எங்களால் பணத்தை அச்சிட முடியாது. நாங்கள் தொடர்ந்து பணத்தை அச்சிட்டால், நாடு முற்றிலும் வீழ்ச்சியடையும். அவர்களின் கடன் வசதியை ஏற் றுக்கொள்ள முடியாது என்றும் IMF கூறியுள்ளது," என்றும் அவர் குறிப் பிட்டுள்ளார்.

நாங்கள் கடன் பெற்று தொடர்ந்து பணம் அச்சடித்து வந்தோம், ஆனால், அந்த நடைமுறை தற்போது முடிவுக்கு வந்துள்ளது. நாட்டை ஆள்பவர் யதார்த்தத்தை எதிர்கொள்ள வேண்டும்.

எனவே, நாட்டில் உள்ள ஒவ்வொரு நபரும் பல சிரமங் களை எதிர்நோக்க வேண்டியுள்ளது எனவும் அமைச்சர் தெரிவித்துள் ளார்.

இலங்கையில்...

பூகம்பம் இடம்பெறலாம் என்ற ஊகத்தையே, நிபுணர்கள் வெளி யிட்டிருந்தனர். இந்நிலையில் அது இலங்கையையும் பாதிக்கும் என அவர்கள் எச்சரிக்கை விடுத்திருந் தனர்.

வட இந்தியாவின் பல்வேறு பிர தேசங்களிலும் இதனால் பாரிய பாதிப்புகள் ஏற்படலாம் என அவர் கள் தெரிவித்துள்ளனர்.

இது, 8 ரிக்டர் அளவில் பாரிய பூகம்பமாக இடம்பெறும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். அவ்வாறு இடம் பெற்றால், அது இலங்கையின் பல பகுதிகளையும் பாதிக்கலாமென, அவர்கள் குறிப்பி டுகின்றனர்.

இந்தியாவின் இமாலய பிரதேசத் திலிருந்து 2500 கிலோமீட்டர் தூரத் தில் இலங்கை காணப்படுகின்றது. இதனாலேயே அவர்கள் இவ்வா றான தகவல்களை வெளியிட்டுள் ளனர்.

இதற்கு முன்னர் அந்தப் பிரதேசத் தில் 5 ரிக்டர் அளவில் ஏற்பட்ட பூகம் பம் கொழும்பில் சில பிரதேசங்க ளில் உணரப்பட்டதாகவும் மேற்படி பணியகம் தெரிவித்துள்ளது. .

அத்துடன் கடந்த சில வாரங்களில் நான்கு சந்தர்ப்பங்களில் இலங்கை யின்,வெல்லவாய மற்றும் புத்தள பிரதேசங்களில் சிறு நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளதையும் அந்த பணி யகம் சுட்டிக்காட்டியுள்ளது.

சமூகப் பணிகளில் போற்றத்தக்க செயற்பாடுகளை முன்னெடுக்கும் கண்டி தமிழ் வர்த்தக சங்கம்

கண்டி தமிழ் வர்த்தக சங்கத்தின் 16 ஆவது நிறைவாண்டு விழா

கண்டி தமிழ் வர்த்தக சங்கத்தின் 16 ஆவது ஆண்டு நிறைவு விழா கண்டி ஏல்ஸ் ரீஜன்ஸ் நட்சத்திர ஹோட்டலில் தலைவர் ஆர். அன்பழகன் தலைமையில் வெகு விமர்சையாக இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கையின் ஹற்றன் நெசனல் வங்கியின் உதவிப் பொது முகாமையாளர் கைலைவாசன் இந்திரவாசன் கலந்து சிறப்பித்தார்.

அத்துடன் கண்டி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் வேலுக்குமார், கண்டி இந்திய உதவித் தூதரக 2 ஆம் நிலை செயலாளர் ஸ்ரீ பி. சோமராஜ் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டதுடன் கௌரவ விருந்தினராக கொழும்பு லக்ஷ்மி இம்பெக்ஸ் உரிமையாளர் பி. மகேஸ்வரன் மற்றும் சிறப்பு விருந்தினராக பல்லேகலை கைத்தொழில் பேட்டை கேசர மினரல்ஸ் மற்றும் கெமிகல் பிரைவெட் லிமிட்டட் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஜீவமால் ஜயவர்த்தன ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

2006 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19 ஆம் திகதி கண்டி நகரில் தனது பயணத்தை ஆரம்பித்து பதிவு செய்த கண்டி தமிழ் வர்த்தக சங்கம் 16 ஆண்டுகளைப் பூர்த்தி செய்ததை முன்னிட்டு நிகழ்வை ஆரம்பித்து வைக்கும் வகையில் மங்கள விளக்கின் சுடர்கள் ஏற்றி வைக்கப்பட்டன.

இதன் போது பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட ஹற்றன் நெசனல் வங்கியின் உதவிப் பொது முகாமையாளர் கைலைவாசன் இந்திரவாசன், முதலாவது மங்கள விளக்கை ஏற்றி வைத்தார். அதனைத் தொடர்ந்து கண்டி தமிழ் வர்த்தக சங்கத்தின் உப தலைவர்களான பி. குமாரதாஸ் மற்றும் ஏ. பி. கனகராஜ், கண்டி உதவி இந்திய தூதுரக 2 ஆம் செயலாளர் ஸ்ரீ பி. சோமராஜ், அதனைத் தொடர்ந்து கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்ட கொழும்பு லக்ஷ்மி இம்பெக்ஸ் உரிமையாளர் பி. மகேஸ்வரன், சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட பல்லேகலை கைத்தொழில் பேட்டை கேசர மினரல்ஸ் மற்றும் கெமிகல் பிரைவெட் லிமிட்டட் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஜீவமால் ஜயவர்த்தன மங்கள விளக்கேற்றி வைத்தார். கண்டி தமிழ் வர்த்தக சங்கத்தின் போசகர்களான பி.டி.ஆர். ராஜன், டாக்டர் எம். செல்வராஜ்,கண்டி தமிழ் வர்த்தக சங்கத்தின் ஸ்தாபகத் தலைவர்களான ஏ. தட்சணாமூர்த்தி, எஸ். பிரேம் ராஜ்குமார், எம். ஸ்ரீதர், சிங்கள வர்த்தக சங்கத்தின் தலைவர் யசஸ் சந்திர சேகர மற்றும் முஸ்லிம் வர்த்தக சங்கத்தின் தலைவர் எச். எம். சலீம்டீன், செயலாளர் முஜிபுர் ரஹ்மான ஆகியோரும் மங்கள விளக்கேற்றி வைத்தனர். இலங்கை வர்த்தக ரிங் தலைவர் பசன் சந்திரசேகர மங்கள விளக்கேற்றி வைத்தார். இறுதியாக கண்டி தமிழ் வர்த்தக சங்கத்தின் செயலாளர் எஸ். பரமேஸ்வரன் செயலாளர், எஸ். சாள்ஸ் ஆகிய இருவரும் மங்கள விளக்கேற்றி வைத்து ஆரம்பித்து வைத்தனர்.

தேசிய கீதம் இசைக்கப்பட்டதுடன் அன்னைத் தமிழின் பெருமை உலகறியச் செய்யும் தமிழ் தாய் வாழ்த்தும் இடம்பெற்றது.

கண்டி தமிழ் வர்த்தக சங்கத்தின் சங்க கீதம் இசைக்கப்பட்டது. அத்துடன் இரஜவலை இந்து தேசிய கல்லூரி மாணவிகளின் சாஸ்திர நடனம் கலந்த வரவேற்பு நடனம் இடம்பெற்றது. சங்கத்தின் உப தலைவர் பி. குமாரதாஸ் வரவேற்புரை நிகழ்த்தினார். இதனைத் தொடர்ந்து சபையோரை மகிழ்விப்பதற்காக முதலாவது கண்கவர் நடனம் இடம்பெற்றது.

சங்கத்தின் பிறப்பில் இருந்து இன்று வரையிலும் ஒன்றரை தசாப்தத்திற்கு மேற்பட்ட காலமாகப் பதிவு செய்யப்பட்ட நிகழ்வுகளின் நினைவுகள் டிஜிட்டல் திரையில் காணொளி ஊடாகக் காண்பிக்கப்பட்டது. கண்டி தமிழ் வர்த்தக சங்கம் தனது அங்கத்தவர்களின் திறமைகளுக்கு என்றும் மதிப்பளித்து வரும் அமைப்பு. வர்த்தகத் துறையில் அவர்கள் அடைகின்ற வெற்றிகளைப் பாராட்டி கௌரவித்தும் வரும் அமைப்பு.

இந்த வகையில் இம்முறை சமூக தீபம் விருது பி. பழனியப்பன் அவர்களுக்கும் தொழில் முனைவர் விருது எம். ஸ்ரீகாந்தன்,தேசமான்ய ரவீந்திரன் ஆகியோருக்கு வழங்கப்பட்டது. வாழ்நாள் சாதனையாளர் விருது ஏ. தட்சணாமூர்த்திக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. செயலாளர் எஸ். பரமேஸ்வரன் அவர்கள் நன்றியுரை நிகழ்த்தினார்.இதில் பெரு எண்ணிக்கையிலா முஸ்லிம், தமிழ் வர்த்தக பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி தொகுப்பை எஸ்.எச் ராஜேந்திராவும் ஆசிரியை சசிகலா ஆகியோர் நிகழ்த்தினர்.

இக்பால் அலி

கிழக்கின் குரல்

காத்தான்குடியில் தனியார் கல்வி நிலையத்தில் டெங்கு குடம்பிகள்

மறு அறிவித்தல் வரை பூட்டு

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

காத்தான்குடியில் தனியார் கல்வி நிலையமொன்றில் டெங்கு குடம்பிகள் காணப்பட்டதையடுத்து குறித்த தனியார் கல்வி நிலையம் மூடப்பட்டுள்ளதாக காத்தான்குடி சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த வாரங்களில் பெறப்பட்ட டெங்கு அறிவித்தலின் பின்னான பரிசோதனைகளுக்கு அமைய இந்த கல்வி நிலையத்தில் கற்ற மாணவர்கள் டெங்கினால் பாதிக்கப்பட்டிருந்தமை

அவதானிக்கப்பட்டதை தொடர்ந்து புதிய காத்தான்குடி மீன்பிடி இலாஹா வீதியிலுள்ள தனியார் கல்வி நிலையம் பரிசோதிக்கப்பட்டு அங்கு டெங்கு குடம்பிகள் காணப்பட்டதை அடுத்து அந்நிலையம் மறு அறிவித்தல் வரை பொதுச் சுகாதார பரிசோதகர்களினால் மூடுமாறு பணிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அருகிலுள்ள ஐந்தாம் ஆண்டு புலமை பரிசில் பரீட்சை வகுப்புகள் இடம்பெறும் இடங்களும் சூழலை கருத்தில் கொண்டு முன்னெச்சரிக்கையாக மற அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளன.மாணவர்கள் சிலர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்

என்பதை கருத்திற்கொண்டு சுகாதார பரிசோதகரின் வழிகாட்டலுக்கு அமைய இடைநிறுத்தப்பட்டுள்ளது.

மாணவர்கள் யாரும் காய்ச்சல், தலைவலி, உடல்நோவாக இருந்தால் உடனடியாக அரச வைத்தியசாலையை நாடி அதற்குரிய மருத்துவ சிகிச்சையை பெற்றுக் கொள்ளுமாறும் காத்தான்குடி சுகாதார அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கிழக்கு ஆளுநர்; மட்டக்களப்பு ஸ்ரீ சத்தியசாயிபாபா வைத்தியசாலைக்கு விஜயம்

ரொட்டவெவ குறூப் நிருபர்

கிழக்கு மாகாண ஆளுநர் திருமதி அனுராதா யஹம்பத் இந்தியாவில் ஸ்ரீ சத்தியசாயி கருணாநிலையம் அறக்கட்டளையால் நடத்தப்படும் மட்டக்களப்பில் உள்ள ஸ்ரீ சத்திய சாயி சஞ்சீவனி வைத்தியசாலைக்கு விஜயமொன்றினை மேற்கொண்டார்

இந்தியாவின் சண்டகுரு ஸ்ரீ மது சூதன் சாய் மற்றும் அவரது சீடர்கள் இதற்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் வழங்கி வருகின்றனர்.இந்த மருத்துவமனை மூலம் சிறு குழந்தைகளுக்கு இதய அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மேலும், கிழக்கு மாகாணத்தில் தற்போது இல்லாத இருதய வடிகுழாய் சிகிச்சை பிரிவு (cath lab) அடுத்த மாதத்திற்குள் நிறுவப்படவுள்ளதாகவும். சத்ய சாய் கருணாநிலையம் அறக்கட்டளை மூலம் நெதர்லாந்தில் இருந்து இதற்கான பொருட்களை கொண்டு வர உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்

இதேபோன்ற வைத்தியசாலைகள் இந்தியா, அமெரிக்கா மற்றும் நைஜீரியா உள்ளிட்ட பல நாடுகளில் உள்ளன எனவும் இலங்கை மருத்துவ சங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

சட்டவிரோத சிகரெட் விற்பனை செய்தவருக்கு ஒரு இலட்சம் தண்டப்பணம்

காரைதீவு குறூப் நிருபர்

சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட 604 சிகரெட்டுகளை வைத்திருந்தவருக்கு ஒரு இலட்சத்து 1500 ரூபாய் தண்டப்பணம் அக்கரைப்பற்று நீதிமன்றத்தில் நேற்று (27) திங்கட்கிழமை விதிக்கப்பட்டது.

சந்தேக நபரை அக்கரைப்பற்று பொலிசார் கைது செய்து அக்கரைப்பற்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்து நேற்று மன்றில் ஆஜர்படுத்தினர்.

அக்கரைப்பற்று மேலதிக நீதிபதி தெசிபா ரஜீவன் இவருக்கு சிகரட்டை வைத்திருந்தமைக்காக ஒரு இலட்சம் ரூபாய் தண்டப்பணமும், விற்பனை செய்தமைக்காக 1500 ரூபாய் தண்டப்பணமும் சேர்த்து மொத்தமாக ஒரு இலட்சத்து 1,500 ருபாய் தண்டப்பணம் விதித்தார்.

மயிலத்தமடுவில் கொல்லப்படும் பசு மாடுகள்;

நடவடிக்கை எடுக்குமாறு கருணாகரன் எம்.பி கோரிக்கை

மயிலத்தமடுவில் காலம் காலமாக தமிழரின் பசுக்கள் அப்பகுதியில் அத்துமீறி குடியேறியவர்களினால் கொலை செய்யப்படுவது தொடர்கதையாக இருந்து வருகின்றது ஓரிரு தினங்களுக்கு முன்பும் இவ்வாறான சம்பவம் ஒன்று நடைபெற்றது. அதில் இரு பசுக்கள் துப்பாக்கி சூட்டினால் கொலை செய்யப்பட்டுள்ளன. மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கோ கருணாகரன் ஸ்தலத்திற்கும் கரடியனார் பொலிஸ் நிலையத்திற்கும் சென்று பாதிக்கப்பட்ட தமிழ் கால்நடைகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு கோரியதாக மயிலத்தமடு கால்நடை வளர்ப்பாளர்கள் சங்கத்தின் தலைவர் சி தியாகராஜா (விமலன்) தெரிவித்தார்.

அவர் தொடர்பில் அவர் மேலும்

தெரிவிக்கையில்,

தமிழர்கள் மயிலத்தமடுவில் பூர்வீக காலம் தொட்டு கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டு வருகிறார்கள் அவர்களுக்கு இதைத்தவிர வேறு மேய்ச்சல் தரை இல்லை

மயிலத்தமடுவில் அண்மைக் காலமாக அத்துமீறி குடியேறி பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வருகிறார்கள். இவர்களுக்கு எதிராக கொழும்பு உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டபோது அவர்களை வெளியேற்ற வேண்டுமென நீதிமன்றம் தீர்ப்பளித்தது அதனை செயல்படுத்தும் பொறுப்பு மகாவலி அபிவிருத்தி சபைக்கு வழங்கப்பட்டது இற்றைவரை அவர்கள் வெளியேற்றப்படவில்லை. கால்நடைகளை துப்பாக்கியால் சுட்டவரை அப்பகுதியில் அத்துமீறி குடியேறிய மக்களே காட்டித் தந்தார்கள் பொலிசார் அப்பகுதிக்கு விசாரணைக்காக வந்தபோது அப்பகுதி மக்கள் இது பற்றி தங்களுக்குத் எதுவும் தெரியாதெனகை விரித்து விட்டார்கள். அதனால் துப்பாக்கியால் மாடுகளை சுட்ட நபர் கைது செய்யப்படவில்லை.

உள்நாட்டு, வெளிநாட்டு பல்கலைக்கழகம் தெரிவான உலமாக்கள் கௌரவிப்பு

கல்முனை மத்திய தினகரன் நிருபர்

நற்பிட்டிமுனை ஹிக்மா ஜும்ஆ பள்ளிவாசலினால் உள்நாட்டு, வெளிநாட்டு பல்கலைக்கழகத்திற்கு தெரிவான நற்பிட்டிமுனையைச் சேர்ந்த உலமாக்களை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் நற்பிட்டிமுனை பள்ளிவாசல்கள் சம்மேளனத் தலைவர் அஷ்ஷெய்க் ஏ.எல். நாஸிர்கனி (ஹாமி) நெறிப்படுத்தலில் ஹிக்மா ஜும்ஆ பள்ளிவாசல் தலைவர் ஐ.எல். ரஊப்தீன் தலைமையில் நடைபெற்றது.

இதில் எச்.எம். தசீர் (ஹாமி) சவூதி அரேபியாவில் உள்ள மதீனா இஸ்லாமியா சர்வதேச பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் நற்பிட்டிமுனையிலிருந்து இப் பல்கலைக்கழகத்திற்குச் செல்லும் இரண்டாவது ஆலிமாவார்.

எஸ்.எம் வாஜீத் (ஹாமி) இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் அரபு பீடத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர்களுக்குரிய பணம் மற்றும் அன்பளிப்பும் ஆசிரியர் எம். பி.எம்.நிஸ்பர் (ஹாமி) தொழிலதிபர் ஏ.கே.நஜீமுதீன், ஹிக்மா ஜும்மா பள்ளித் தலைவர் ஐ.எல். றஊப்தீன் ஆகியோரினால் வழங்கி வைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டது.

யானை தாக்குதலில் பலியாகும் உயிர்கள்:

பாதுகாப்பது தொடர்பில் அரசாங்க அதிபர் தலைமையில் உயர்மட்ட கலந்துரையாடல்

சவளக்கடை குறூப் நிருபர்

சம்மாந்துறை பிரதேசத்தில் யானைகளினால் ஏற்படும் பிரச்சினைகளை கட்டுப்படுத்துவது தொடர்பான அவசர கலந்துரையாடல் அம்பாரை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ.டக்ளஸ் தலைமையில் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இதில் சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளர் ஐ.எல்.எம்.மாஹிர், சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனீபா, வன ஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் மாவட்ட உதவிப்பணிப்பாளர் பிரசாந்த, மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் எம்.சீ.எம்.றியாஸ், வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் உத்தியோகத்தர்களான ஜெகதீஸ், சுரேஸ்குமார், சிசிர காமினி, கித்சிறி மெமன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

பொதுமக்களுக்கும், விவசாயிகளுக்கும் சேதம் ஏற்படுத்தும் குறித்த ஒரு யானையை இனங்கண்டுள்ளதாகவும் அதனை வனவிலங்கு சரணாலயத்திற்கு இன்று ஏற்றி செல்லுவதற்கான நடைவடிக்கை எடுப்பதாகவும், விவசாய நடவடிக்கை முடியும் வரை யானைகளை வனவிலங்கு பாதுகாப்பு செயலணியும், சிவில் பாதுகாப்பு படையும் இணைந்து விவசாயிகளின் பாதுகாப்பை வயல் நிலப் பகுதிகளில் உறுதிப்படுத்துவதாக தீர்மானிக்கப்பட்டது.

யுவதியை காணவில்லை

அக்கரைப்பற்றில் யுவதி ஒருவர், பெற்றோருக்குத் தெரியாமல் மாயமாக மறைந்துள்ளார். சுமார் இரண்டு மாதங்களாகியும் இவர் குறித்த தகவல்கள் கிடைக்காததால், பெற்றோர்கள்பெரும்பீதியடைந்துள்ளனர். 116ஏ, பிரதான வீதி அக்கரைப்பற்று எனும் விலாசத்தில் வசித்த என்.ஹனாதி என்ற யுவதியே, இவ்வாறு காணாமல் போயுள்ளார். இந்த யுவதி கடத்தப்பட்டாரா? அல்லது காதல் தொடர்பால் வீட்டை விட்டு வெளியே சென்றாரா என்பதில், பெற்றோர்கள் பெரும் குழப்பமடைந்துள்ளனர்.

இது குறித்து பொலிஸ் நிலையத்திலும், இரகசிய பொலிஸாரிடமும் முறைப்பாடு செய்யப்பட்டும் இதுவரை, எவ்விதத் தகவல்களும் கிடைக்கவில்லை. இவரைக் கண்டால், அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்துக்கு அறிவிக்குமாறு பெற்றோர் வேண்டியுள்ளனர்.

சிசிச்சையளிக்கப்பட்ட காட்டுயானை இறப்பு

வெல்லாவெளி தினகரன் நிருபர்

மட்டக்களப்பு கொம்மாதுறை தீவுப் பகுதியில் 20 நாட்களாக சிசிச்சையளிக்கப்பட்டு வந்த காட்டு யானை சிசிச்சை பலனின்றி நேற்று (27) அதிகாலை உயிரிழந்துள்ளதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றார்கள்.

மட்டக்களப்பு செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கொம்மாதுறை தீவுப் பகுதியில் காட்டு யானை ஒன்று, கால் ஒன்றில் ஏற்பட்ட சூட்டு காயம் காரணமாக நடக்க முடியாமல் கீழே விழுந்து தன்னுடைய உணவுத்தேவைக்காக மீளவும் எழ முடியாமல் தவித்துக் கொண்டு உயிருக்கு போராடி வந்த நிலையில் நேற்று உயிரிழந்துள்ளது.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் நினைவேந்தலின் 5ஆவது தொடர் நிகழ்வும் அவர்தம் உறவுகளை கௌரவித்தல் நிகழ்வும் நேற்று முன்தினம் மாலை (26) அக்கரைப்பற்று பாவேந்தர் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றது. நினைவேந்தல் நிகழ்வில் உயிர்நீத்தவர்களின் உருவப்படத்திற்கு உறவுகள் இணைந்து ஈகைச்சுடரேற்றினர். படம்: வாச்சிக்குடா விஷேட நிருபர்

பொத்துவில் ஆதார வைத்தியசாலையின் குறைபாடுகளை நிவர்த்திக்குமாறு மக்கள் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம்

ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்

பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் காணப்படும் தேவைப்பாடுகளையும், குறைபாடுகளையும் நிவர்த்தி செய்யுமாறு கோரி நேற்று (27) காலை 9.00 மணியளவில் பொத்துவில் பிரதான வீதியின் பொத்துவில் ஆதார வைத்தியசாலை அருகாமையில் இந்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

"அப்பாவி உயிர்களைக் காப்பாற்ற வசதிகளை ஏற்படுத்தித்தா" எனும் தொனிப்பொருளில் பொத்துவில் நலன் விரும்பிகளால் ஏற்பாடு செய்யப்பட்ட இக் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் பொதுமக்கள் மற்றும் இளைஞர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

உடனடியாக நிரந்தர வைத்திய அத்தியட்சகரை நியமி, உடனடியாக சத்திர சிகிச்சை நிபுணரை நியமி, உடனடியாக பொது வைத்திய நிபுணரை நியமி,நேர்மையாக கடமை செய்த வைத்திய அத்தியட்சகருக்கு இடமாற்றமா?, அத்தியாவசிய மருந்துகளையும், வைத்திய உபகரணங்களையும் பெற்றுத்தா, நாங்களும் மனிதர்கள், அம்பாறை மாவட்ட முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களே எமது பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வுகளைப் பெற்றுத் தாருங்கள் என்ற வாசகங்கள் எழுதப்பட்ட சுலோகங்களை ஏந்தியும் கோசங்களை எழுப்பியவாறும் ஆர்ப்பாட்டத்தில் பலரும் ஈடுபட்டனர்.

'புல் ஏந்தா பனித்துளிகள்" கவிதை நூல் வெளியீடு

திராய்க்கேணி தினகரன் நிருபர்

தேசிய ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் (நுஜா) ஏற்பாட்டில் அட்டாளைச்சேனை கவிதாயினி மேகா மிர்சா எழுதிய "புல் ஏந்தா பனித்துளிகள்" கவிதை நூல் வெளியீட்டு விழா (26) அட்டாளைச்சேனை பலநோக்கு கூட்டுறவுச்சங்க கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

தேசிய ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் சிரேஸ்ட ஊடகவியலாளர் எஸ்.எம்.அறூஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நூல் வெளியீட்டு விழாவுக்கு திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

கௌரவ அதிதிகளாக பொத்துவில் பிரதேச சபை தவிசாளர் எம். எச்.அப்துல் றஹீம், அட்டாளைச்சேனை உதவிப் பிரதேச செயலாளர் சட்டத்தரணி நஹீஜா முஸாபிர், பொத்துவில் மக்கள் வங்கிக்

கிளையின் வியாபார திட்ட முகாமையாளர் எம்.ஐ.எம்.நபில், சாய்ந்தமருது சமுர்த்தி வங்கி முகாமையாளர் சிரேஸ்ட ஊடகவியலாளர் கலாநிதி ரியாத் ஏ. மஜித் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

நூல் ஆய்வினை தென்கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட பேராசிரியர் றமீஸ் அப்துல்லாவும், நூல் அறிமுகத்தை பன்னூலாசிரியர் எஸ்.எல்.மன்சூர், நூல் நயத்தினை சிரேஷ்ட ஊடகவியலாளர் ஜூல்பிகா ஷெரிப் ஆகியோரினால் நிகழ்த்தப்பட்டது.

கேள்விமனு அறிவித்தல்

கண்டி கடவத் ஸத்தர மற்றும் கங்கவட்ட கோறளை பிரதேச சபை

இங்கு கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள இந்தச் சபைக்குச் சொந்தமான இங்கு விபரிக்கப்பட்டுள்ள பேராதனை - கொழும்பு வீதியில் ஐந்து (05) கடை அறைகளது வர்த்தக உரிமையைக் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கால எல்லைக்கான குத்தகை வழங்குவதற்குரிய விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

இதற்கென விலைமனுக்களை முன்வைக்க உத்தேசித்துள்ள கேள்விமனுதாரர்கள் விண்ணப்பப் படிவக் கட்டணமாக மீளளிக்கப்படாத ரூ.1000.00 தொகையைக் காசாளரிடம் செலுத்தி நிபந்தனைகளுடனான விண்ணப்பப் படிவத்தை 2023.03.01 ஆம் திகதியிலிருந்து 2023.03.31 ஆம் திகதி பி.ப 3.00 மணிவரை சபையில் அலுவலக நாட்களில் பெற்றுக்கொள்ள முடியும்.

விலைமலுக்களை முதற்பிரதி, இணைப்பிரதி என வேறாக்கிப் பின்னர் ஒரு உறையில் இட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் கடை அறைகளைக் குத்தகையில் பெறுதல் (1/2/3/4/5 உத்தேச இலக்கம்) எனக் குறிப்பிட்டு 2023.03.22 ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு முன்னர் தவிசாளர், கண்டி கடவத் ஸத்தர மற்றும் கங்கவட்ட கோறளே பிரதேச சபை, அம்பிட்டிய என்ற முகவரிக்குப் பதிவுத் தபாவில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

மேலும், மீளளிக்கப்படும் வைப்புத் தொகையான ரூ. 5000.00 பணத்தை அலுவலகக் காசாளரிடம் செலுத்திப் பெறப்பட்ட பற்றுச்சீட்டையும் விலைமனுக்களுடன் அனுப்பிவைத்தல் வேண்டும். 2023.03.22 ஆம் திகதி மு.ப.11.00 மணிக்குப் பிரதேச சபையின் அம்பிட்டிய பிரதம அலுவலகத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும். அதில் நீங்கள் அல்லது உங்களது அதிகாரம் பெற்ற பிரதிநிதி ஒருவர் கலந்துகொள்ள முடியும். விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் கண்டி கடவத் ஸத்தர மற்றும் கங்கவட்ட கோறளே பிரதேச சபையின் டென்டர் கமிட்டிக்கு உரியது.

- விலைமனு பற்றிய நிபந்தனைகள் விண்ணப்பப் படிவத்துடன் வழங்கப்படும்.
- மேலதிக விபரங்களை 081-2241222/081-2062062 என்ற இலக்கங்களுடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

தொடர் இல.	வர்த்தக நிலையத்தின் தன்மை	மீளளிக்கப்படும் விலைமனு வைப்புத் தொகை ரூ. ச.	மீளளிக்கப்படாத விண்ணப்பப் படிவக் கட்டணம் ரூ. ச.	அதி குறைந்த கேள்வி (வருடாந்த) ரூ. ச.	வர்த்தகத்தை நடத்திச்செல்ல வழங்கப்படும் காலம்
01	கடை அறை - 01	5000.00	1000.00	202200.00	2023 ஏப்பிரல் 01 திகதி முதல் 2024 மார்ச் 31 திகதி வரை
02	கடை அறை - 02	5000.00	1000.00	215400.00	2023 ஏப்பிரல் 01 திகதி முதல் 2024 மார்ச் 31 திகதி வரை
03	கடை அறை - 03	5000.00	1000.00	202200.00	2023 ஏப்பிரல் 01 திகதி முதல் 2024 மார்ச் 31 திகதி வரை
04	கடை அறை - 04	5000.00	1000.00	208800.00	2023 ஏப்பிரல் 01 திகதி முதல் 2024 மார்ச் 31 திகதி வரை
05	கடை அறை - 05	5000.00	1000.00	141000.00	2023 ஏப்பிரல் 01 திகதி முதல் 2024 மார்ச் 31 திகதி வரை

ஆர்.ஏ.எஸ். சிசிர குமார தவிசாளர்
கண்டி கடவத் ஸத்தர மற்றும்
கங்கவட்ட கோறளே பிரதேச சபை,
அம்பிட்டிய.

கண்டி கடவத் ஸத்தர மற்றும்
கங்கவட்ட கோறளே பிரதேச சபை அலுவலகம்,
அம்பிட்டிய.
2023.03.01

இலங்கை மருத்துவ சபை

12 (1) (d) ஆம் பிரிவின் கீழ் மருத்துவ சபைக்கான உறுப்பினர்கள் தேர்தல் மருத்துவ கட்டளைச்சட்டத்தின் 41 ஆம் பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட மருத்துவ மற்றும் அறுவை சிகிச்சிகளை மேற்கொள்வதற்கான தகுதியுள்ள நபர்கள்

மருத்துவ கட்டளைச்சட்டத்தின் 12 (1) (d) பிரிவின் கீழ் ஒரு (**01**) உறுப்பினர்களை மருத்துவ சபைக்கு தேர்வு செய்வதற்கான வேட்புமனுக்கள் பெறப்படும். அவர் தற்போது செல்லுபடியாகும் பதிவுகள் கொண்ட மருத்துவ கட்டளைச்சட்டத்தின் 41 ஆம் பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட மருத்துவ மற்றும் அறுவை சிகிச்சிகளை மேற்கொள்வதற்கான தகுதியுள்ள நபராக இருத்தல் வேண்டும்

வேட்புமனு படிவத்தினை மருத்துவ சபையின் www.slmc.gov.lk இணையத்தளத்தின் மூலம் பதிவிறக்கம் செய்யலாம். ஒவ்வொரு வேட்புமனுவிலும் மருத்துவ கட்டளைச் சட்டத்தின் 41 ஆம் பிரிவின் கீழ் செல்லுபடியாகும் பதிவுகள் கொண்ட ஐந்து (05) அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களினால் கையொப்பமிடப்பட்டிருக்க வேண்டும் என்பதுடன் அதில் முழுப் பெயர் மற்றும் பதிவு இலக்கம் மற்றும் தேர்தல் கோரும் நபரின் ஒப்புதல் குறிக்கப்பட்டிருக்க வேண்டும். கையொப்பங்கள் மருத்துவ சபையின் ஆவணங்களுடன் உறுதிப்படுத்தப்படும். அறிவித்தலின் இறுதி திகதியில் பதிவுச்சான்றிதழின் செல்லுபடியாகும் தன்மை உறுதிப்படுத்தப்படும்.

கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வேட்புமனு தாக்கல் செய்யப்படும் காலப்பகுதியில் வேட்புமனுவின் பிரதியினை வேட்பாளரினால் நேரடியாக இல.10, நொரிஸ் கெனல் வீதி, கொழும்பு 10 இல் அமைந்துள்ள இலங்கை மருத்துவ சபையின் ‘‘தெரிவத்தாட்சி அலுவலருக்கு’’ ஒப்படைக்கப்பட வேண்டும்.

2023 ஆம் ஆண்டு மார்ச 07 ஆம் திகதி (செவ்வாய்க்கிழமை) தொடக்கம் **2023** ஆம் ஆண்டு மார்ச் 21ஆம் திகதி வரை (செவ்வாய்க்கிழமை) வேட்புமனுக்கள் வேலை நாட்களில் மு.ப. **9.00** மணி தொடக்கம் பி.ப. **3.00** மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

தேர்தல் தேவைப்படுமாயின் மேலும் அறிவித்தல் வழங்கப்படும்.

பே.வஜிர எச்.டபிலியு. திஸாநாயக்க
தலைவர்/தெரிவத்தாட்சி அலுவலர்
இலங்கை மருத்துவ சபை
இல.10, நொரிஸ் கெனல் வீதி, கொழும்பு 10
071-7412222
திகதி 2023.02.28

குறிப்பு இல. 2259/54, 2021 ஆம் ஆண்டு டிசம்பர் 24 ஆம் திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி, 09 ஆம் பிரிவின் ஒழுங்குமுறை பாகம் I இன் பெயர் நியமனங்களின் கீழான தேர்தல் நடைமுறைக்குறியதாகும்.

2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப. **3.00** மணிக்கு பின்பு அல்லது **2023** ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப. **3.00** மணிக்கு முன்பு வேட்புமனு சம்பந்தமான ஆட்சேபனைகள் அல்லது வேட்புமனுக்களினை மீளப்பெறுவது தொடர்பாக ‘‘தெரிவத்தாட்சி அலுவலருக்கு’’ எழுத்துமூலமாக சமர்பிக்கப்பட வேண்டும்.

இலங்கை மருத்துவ சபை (இ.ம.ச.)

12 (1) (d) ஆம் பிரிவின் கீழ் மருத்துவ சபைக்கான உறுப்பினர்கள் தேர்தல்
மருத்துவ கட்டளைச் சட்டத்தின் 41 ஆம் பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட மருத்துவ மற்றும் அறுவை சிகிச்சைகளை மேற்கொள்வதற்கான தகுதியுள்ள நபர்கள்

முழுப் பெயர் : .....
இ.ம.ச. யின் பதிவு இல. : .....
தே.அ.இல. : .....
ஆண்/பெண் : .....
இ.ம.ச. பதிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரியின் முகவரி : .....
தொழில் இடம் : .....
தொலைபேசி இலக்கம் : .....
மின்னஞ்சல் முகவரி : .....
..... ஆகிய நான் இலங்கை மருத்துவ சபைக்கு உறுப்பினர்கள் தெரிவு செய்வதற்காக சிபாரிசு செய்யப்படுவதற்காக இத்தால் சம்மதம் தெரிவிக்கின்றேன்.

கையொப்பம் : ....
திகதி .....

மருத்துவ கட்டளைச் சட்டத்தின் 12 (1) (d) ஆம் பிரிவின் கீழ் இ.ம.ச பதிவு இல. ..... கொண்ட வைத்தியர் ..... (முழுப் பெயர்) உறுப்பினராக தெரிவு செய்வதற்கு இத்தால் சிபாரிசு செய்கின்றோம்.

	பெயர்	இ.ம.ச. பதிவு செய்யப்பட்ட முகவரி	இ.ம.ச. யின் பதிவு இல.	கையொப்பம்	திகதி
1					
2					
3					
4					
5					

To Buy Your Dream Vehicle within your Budget
If it is a vehicle you want,
YOU NAME IT, WE HAVE IT
Sunday Observer ADZ Auto Focus

THE ONLY PLACE TO BUY YOUR DREAM CAR!
Sunday Observer ADZ

- Auto Focus
Magazine Issued with Sunday Observer
Hot Line 011 2 429 369 011 2 429 368
E-mail adzsuo@gmail.com

இலங்கை மருத்துவ சபை

12 (1) (e) ஆம் பிரிவின் கீழ் மருத்துவ சபைக்கான உறுப்பினர்கள் தேர்தல் மருத்துவ கட்டளைச்சட்டத்தின் 43 ஆம் பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட பல் மருத்துவர்கள்

மருத்துவ கட்டளைச்சட்டத்தின் 12 (1) (e) பிரிவின் கீழ் ஒரு (**01**) உறுப்பினர்களை மருத்துவ சபைக்கு தேர்வு செய்வதற்கான வேட்புமனுக்கள் பெறப்படும். அவர் தற்போது செல்லுபடியாகும் பதிவுகள் கொண்ட மருத்துவ கட்டளைச்சட்டத்தின் 43 ஆம் பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட பல் மருத்துவராக இருக்க வேண்டும்.

வேட்புமனு படிவத்தினை மருத்துவ சபையின் www.slmc.gov.lk இணையத்தளத்தின் மூலம் பதிவிறக்கம் செய்யலாம். ஒவ்வொரு வேட்புமனுவிலும் மருத்துவ கட்டளைச் சட்டத்தின் 43 ஆம் பிரிவின் கீழ் செல்லுபடியாகும் பதிவுகள் கொண்ட ஐந்து (05) அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களினால் கையொப்பமிடப்பட்டிருக்க வேண்டும் என்பதுடன் அதில் முழுப் பெயர் மற்றும் பதிவு இலக்கம் மற்றும் தேர்தல் கோரும் நபரின் ஒப்புதல் குறிக்கப்பட்டிருக்க வேண்டும். கையொப்பங்கள் மருத்துவ சபையினால் கிடைக்கப்பெறும் ஆவணங்களுடன் உறுதிப்படுத்தப்படும். அறிவித்தலின் இறுதி திகதியில் பதிவுச்சான்றிதழின் செல்லுபடியாகும் தன்மை உறுதிப்படுத்தப்படும்.

கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வேட்புமனு தாக்கல் செய்யப்படும் காலப்பகுதியில் வேட்புமனுவின் பிரதியினை வேட்பாளரினால் நேரடியாக இல.10, நொரிஸ் கெனல் வீதி, கொழும்பு 10 இல் அமைந்துள்ள இலங்கை மருத்துவ சபையின் ‘‘தெரிவத்தாட்சி அலுவலருக்கு’’ ஒப்படைக்கப்பட வேண்டும்.

2023 ஆம் ஆண்டு மார்ச 07 ஆம் திகதி (செவ்வாய்க்கிழமை) தொடக்கம் **2023** ஆம் ஆண்டு மார்ச் 21ஆம் திகதி வரை (செவ்வாய்க்கிழமை) வேட்புமனுக்கள் வேலை நாட்களில் மு.ப. **9.00** மணி தொடக்கம் பி.ப. **3.00** மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

தேர்தல் தேவைப்படுமாயின் மேலும் அறிவித்தல் வழங்கப்படும்.

பே.வஜிர எச்.டபிலியு. திஸாநாயக்க
தலைவர்/தெரிவத்தாட்சி அலுவலர்
இலங்கை மருத்துவ சபை
இல.10, நொரிஸ் கெனல் வீதி, கொழும்பு 10
071-7412222
திகதி 2023.02.28

குறிப்பு இல. 2259/54, 2021 ஆம் ஆண்டு டிசம்பர் 24 ஆம் திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி, 09 ஆம் பிரிவின் ஒழுங்குமுறை பாகம் I இன் பெயர் நியமனங்களின் கீழான தேர்தல் நடைமுறைக்குறியதாகும்.

2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப. **3.00** மணிக்கு பின்பு அல்லது **2023** ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப. **3.00** மணிக்கு முன்பு வேட்புமனு சம்பந்தமான ஆட்சேபனைகள் அல்லது வேட்புமனுக்களினை மீளப்பெறுவது தொடர்பாக ‘‘தெரிவத்தாட்சி அலுவலருக்கு’’ எழுத்துமூலமாக சமர்பிக்கப்பட வேண்டும்.

இலங்கை மருத்துவ சபை (இ.ம.ச.)

12 (1) (e) ஆம் பிரிவின் கீழ் மருத்துவ சபைக்கான உறுப்பினர்கள் தேர்தல்
மருத்துவ கட்டளைச் சட்டத்தின் 43 ஆம் பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட பல் மருத்துவர்கள்

முழுப் பெயர் : .....
இ.ம.ச. யின் பதிவு இல. : .....
தே.அ.இல. : .....
ஆண்/பெண் : .....
இ.ம.ச. பதிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரியின் முகவரி : .....
தொழில் இடம் : .....
தொலைபேசி இலக்கம் : .....
மின்னஞ்சல் முகவரி : .....
..... ஆகிய நான் இலங்கை மருத்துவ சபைக்கு உறுப்பினர்கள் தெரிவு செய்வதற்காக சிபாரிசு செய்யப்படுவதற்காக இத்தால் சம்மதம் தெரிவிக்கின்றேன்.

கையொப்பம் : ....
திகதி .....

மருத்துவ கட்டளைச் சட்டத்தின் 12 (1) (e) ஆம் பிரிவின் கீழ் இ.ம.ச பதிவு இல. ..... கொண்ட வைத்தியர் ..... (முழுப் பெயர்) உறுப்பினராக தெரிவு செய்வதற்கு இத்தால் சிபாரிசு செய்கின்றோம்.

	பெயர்	இ.ம.ச. பதிவு செய்யப்பட்ட முகவரி	இ.ம.ச. யின் பதிவு இல.	கையொப்பம்	திகதி
1					
2					
3					
4					
5					

இலங்கை மருத்துவ சபை

12 (1) (c) ஆம் பிரிவின் கீழ் மருத்துவ சபைக்கான உறுப்பினர்கள் தேர்தல் மருத்துவ கட்டளைச்சட்டத்தின் 29 ஆம் பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட மருத்துவ பயிலுநர்கள்

மருத்துவ கட்டளைச்சட்டத்தின் 12 (1) (c) பிரிவின் கீழ் எட்டு (**08**) உறுப்பினர்களை மருத்துவ சபைக்கு தேர்வு செய்வதற்கான வேட்புமனுக்கள் பெறப்படும். அவர் தற்போது செல்லுபடியாகும் பதிவுகள் கொண்ட மருத்துவ கட்டளைச்சட்டத்தின் 29 ஆம் பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட மருத்துவ பயிலுநராக இருக்க வேண்டும்.

வேட்புமனு படிவத்தினை மருத்துவ சபையின் www.slmc.gov.lk இணையத்தளத்தின் மூலம் பதிவிறக்கம் செய்யலாம். ஒவ்வொரு வேட்புமனுவிலும் மருத்துவ கட்டளைச் சட்டத்தின் 29 ஆம் பிரிவின் கீழ் செல்லுபடியாகும் பதிவுகள் கொண்ட பத்து (10) அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களினால் கையொப்பமிடப்பட்டிருக்க வேண்டும் என்பதுடன் அதில் முழுப் பெயர் மற்றும் பதிவு இலக்கம் மற்றும் தேர்தல் கோரும் நபரின் ஒப்புதல் குறிக்கப்பட்டிருக்க வேண்டும். கையொப்பங்கள் மருத்துவ சபையின் ஆவணங்களுடன் உறுதிப்படுத்தப்படும். அறிவித்தலின் இறுதி திகதியில் பதிவுச்சான்றிதழின் செல்லுபடியாகும் தண்மை உறுதிப்படுத்தப்படும்.

கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வேட்புமனு தாக்கல் செய்யப்படும் காலப்பகுதியில் வேட்புமனுவின் பிரதியினை வேட்பாளரிநால் நேரடியாக இல.10, நொரிஸ் கெனல் வீதி, கொழும்பு 10 இல் அமைந்துள்ள இலங்கை மருத்துவ சபையின் ‘‘தெரிவத்தாட்சி அலுவலருக்கு’’ ஒப்படைக்கப்பட வேண்டும்.

2023 ஆம் ஆண்டு மார்ச 07 ஆம் திகதி (செவ்வாய்க்கிழமை) தொடக்கம் **2023** ஆம் ஆண்டு மார்ச் 21ஆம் திகதி வரை (செவ்வாய்க்கிழமை) வேட்புமனுக்கள் வேலை நாட்களில் மு.ப. **9.00** மணி தொடக்கம் பி.ப. **3.00** மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

தேர்தல் தேவைப்படுமாயின் மேலும் அறிவித்தல் வழங்கப்படும்.

பே.வஜிர எச்.டபிலியு. திஸாநாயக்க
தலைவர்/தெரிவத்தாட்சி அலுவலர்
இலங்கை மருத்துவ சபை
இல.10, நொரிஸ் கெனல் வீதி, கொழும்பு 10
071-7412222
திகதி 2023.028

குறிப்பு இல. 2259/54, 2021 ஆம் ஆண்டு டிசம்பர் 24 ஆம் திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி, 09 ஆம் பிரிவின் ஒழுங்குமுறை பாகம் I இன் பெயர் நியமனங்களின் கீழான தேர்தல் நடைமுறைக்குறியதாகும்.

2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப. **3.00** மணிக்கு பின்பு அல்லது **2023** ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப. **3.00** மணிக்கு முன்பு வேட்புமனு சம்பந்தமான ஆட்சேபனைகள் அல்லது வேட்புமனுக்களினை மீளப்பெறுவது தொடர்பாக ‘‘தெரிவத்தாட்சி அலுவலருக்கு’’ எழுத்துமூலமாக சமர்பிக்கப்பட வேண்டும்.

இலங்கை மருத்துவ சபை (இ.ம.ச.)

12 (1) (C) ஆம் பிரிவின் கீழ் மருத்துவ சபைக்கான உறுப்பினர்கள் தேர்தல்
மருத்துவ கட்டளைச் சட்டத்தின் 29 ஆம் பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட மருத்துவ பயிலுநர்

முழுப் பெயர் : .....
இ.ம.ச. யின் பதிவு இல. : .....
தே.அ.இல. : .....
ஆண்/பெண் : .....
இ.ம.ச. பதிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரியின் முகவரி : .....
தொழில் இடம் : .....
தொலைபேசி இலக்கம் : .....
மின்னஞ்சல் முகவரி : .....
..... ஆகிய நான் இலங்கை மருத்துவ சபைக்கு உறுப்பினர்கள் தெரிவு செய்வதற்காக சிபாரிசு செய்யப்படுவதற்காக இத்தால் சம்மதம் தெரிவிக்கின்றேன்.

கையொப்பம் : ..... திகதி .....

மருத்துவ கட்டளைச் சட்டத்தின் 12 (1) (C) ஆம் பிரிவின் கீழ் இ.ம.ச பதிவு இல. ..... கொண்ட வைத்தியர் ..... (முழுப் பெயர்) உறுப்பினராக தெரிவு செய்வதற்கு இத்தால் சிபாரிசு செய்கின்றோம்.

	பெயர்	இ.ம.ச. பதிவு செய்யப்பட்ட முகவரி	இ.ம.ச. யின் பதிவு இல.	கையொப்பம்	திகதி
1					
2					
3					
4					
5					
6					
7					
8					
9					
10					

CargillsBank
வாழ்க்கைக்கு உயிரூட்டும் வங்கி

வரையறுக்கப்பட்ட கார்கில்ஸ் வங்கி
31 டிசம்பர் 2022 இல் முடிவடைந்த ஒன்பது மாதங்களுக்கான நிதிநிலைகள் அறிக்கைகள்

வருமானக் கூற்று

	ஒன்பது மாதங்கள் முடிந்தது			காலாண்டு முடிந்தது		
	31-12-2022	31-12-2021 (கணக்காய்வு செய்த)	மாற்றம்	31-12-2022	31-12-2021	மாற்றம்
	ரூ. ' 000	ரூ. ' 000	%	ரூ. ' 000	ரூ. ' 000	%
வட்டி வருமானம்	8,002,096	4,099,607	95	2,373,755	1,130,384	110
கழி: வட்டிச் செலவினங்கள்	(4,823,289)	(2,259,926)	(113)	(1,621,715)	(610,577)	(166)
தேறிய வட்டி வருமானம்	3,178,807	1,839,681	73	752,040	519,807	45
கட்டணம் மற்றும் தரகு வருமானம்	1,272,446	767,818	66	343,017	232,066	48
கட்டணம் மற்றும் தரகுச் செலவினங்கள்	(410,078)	(275,737)	(49)	(121,351)	(80,326)	(51)
தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம்	862,368	492,081	75	221,666	151,740	46
வியாபார நடவடிக்கைகள் மூலமான தேறிய இலாபம்/(நட்டம்)	994	(1,196)	183	617	(4,313)	114
நிதிச் சொத்துக்களின் அங்கீகாரத்தை இரத்து செய்வதிலிருந்தான நிகர இலாபம்/(நட்டம்)	20,814	(18,368)	213	7,549	(7,404)	202
ஏனைய தொழிற்பாட்டு வருமானம் - தேறிய *	192,260	146,309	31	79,186	13,304	495
மொத்த ஏனைய வருமானம்	214,068	126,745	69	87,352	1,587	5,404
மொத்த தொழிற்பாட்டு வருமானம்	4,255,243	2,458,507	73	1,061,058	673,134	58
கடன்கள் மற்றும் ஏனைய நட்டங்களுக்கான குறைபாடுகள்	(1,465,375)	(684,510)	(114)	(259,007)	(392,640)	34
தேறிய தொழிற்பாட்டு வருமானம்	2,789,869	1,773,997	57	802,051	280,494	186
பணியாளர் செலவுகள்	(915,285)	(842,691)	(9)	(230,412)	(208,199)	(11)
பெறுமானத் தேய்வு மற்றும் கடன் தீர்ப்பனவு	(437,031)	(420,213)	(4)	(171,109)	(114,121)	(50)
ஏனைய தொழிற்பாட்டுச் செலவினங்கள்	(1,015,027)	(773,594)	(31)	(246,828)	(182,220)	(35)
மொத்த தொழிற்பாட்டுச் செலவினங்கள்	(2,367,343)	(2,036,498)	(16)	(648,349)	(504,540)	(29)
நிதிச் சேவைகள் மூலமான வரிக்கு முந்திய செயற்படு இலாபம் / (நட்டம்)	422,526	(262,501)	261	153,702	(224,046)	169
நிதிச் சேவைகள் மீதான வரி	(239,718)	(106,154)	(126)	(72,638)	(4,149)	(1,651)
வரிக்கு முந்திய இலாபம்/(நட்டம்)	182,808	(368,655)	150	81,064	(228,195)	136
கழி: வரிச் செலவினங்கள்	315,409	91,528	245	309,553	145,486	113
வருடத்திற்கான இலாபம்/(நட்டம்)	498,216	(277,127)	280	390,618	(82,708)	572
பங்கொன்றின் இலாபம்/(நட்டம்) - ரூ.	0.56	(0.31)	280	0.44	(0.09)	572

பங்கு மாற்றங்களின் கூற்று

	உரிமை மூலதனம்	நியதிச் சட்ட இருப்புக்கள்	பிற விரிவான வருமான இருப்பு மூலம் நியாயமான மதிப்பு	திரட்டப்பட்ட இழப்பு	மொத்தம்
	ரூ. ' 000	ரூ. ' 000	ரூ. ' 000	ரூ. ' 000	ரூ. ' 000
2021.01.01 திகதியன்று மீதி - கணக்காய்வு செய்யப்பட்டது	11,394,421	32,386	80,162	(1,772,667)	9,734,302
31.12.2021 உடன் முடிவடைந்த காலத்திற்கான மொத்த முற்றுமடங்கலான வருமானம்					
காலப்பகுதிக்கான இலாபம்	-	-	-	(277,127)	(277,127)
ஏனைய முற்றுமடங்கலான வருமானம்/(நட்டம்), தேறிய வரி	-	-	(132,313)	-	(132,313)
காலப்பகுதிக்கான மொத்த முற்றுமடங்கலான வருமானம்	-	-	(132,313)	(277,127)	(409,439)
வங்கி உரிமையாளர்களுடனான பரிவர்த்தனைகள் பங்களிப்புகள் மற்றும் விநியோகங்கள்					
காலப்பகுதிக்கான இலாபம்	-	-	-	-	-
ஏனைய விபரமான வருமானம்/(நட்டம்), தேறிய வரி	-	-	-	-	-
காலப்பகுதிக்கான மொத்த விபரமான வருமானம்	-	-	-	-	-
31.12.2021 திகதியன்று மீதி	11,394,421	32,386	(52,151)	(2,049,794)	9,324,862
31.12.2022 உடன் முடிவடைந்த ஒன்பது மாதங்களுக்கான மொத்த விரிவான வருமானம்					
காலப்பகுதிக்கான இலாபம்	-	-	-	498,216	498,216
ஏனைய விபரமான வருமானம்/(நட்டம்), தேறிய வரி	-	-	(93,048)	(4,333)	(97,380)
காலப்பகுதிக்கான மொத்த விபரமான வருமானம்	-	-	(93,048)	493,883	400,836
31.12.2022 திகதியன்று மீதி	11,394,421	32,386	(145,198)	(1,555,911)	9,725,698

இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய முற்றுமடங்கலான வருமானக் கூற்று

	ஒன்பது மாதங்கள் முடிந்தது			காலாண்டு முடிந்தது		
	31-12-2022	31-12-2021 (கணக்காய்வு செய்த)	மாற்றம்	31-12-2022	31-12-2021	மாற்றம்
	ரூ. ' 000	ரூ. ' 000	%	ரூ. ' 000	ரூ. ' 000	%
காலப்பகுதிக்கான இலாபம்/(நட்டம்)	498,216	(277,127)	280	390,618	(82,708)	572
வரி நீங்கலான ஏனைய முற்றுமடங்கலான வருமானம்						
இலாப நட்டம் என மறுவகைப்படுத்தப்படாத உருப்படிகள்						
வரையறுக்கப்பட்ட நன்மைத் திட்டங்களில் தேறிய காப்பீட்டு வருமானம்	(5,701)	(6,016)	5	-	(6,016)	100
உரிமை முதல் கருவிகளில் நியாயமான பெறுமதி	1,368	(3)	39,668	1,368	(3)	39,668
மேலே தொடர்பான ஒத்திவைக்கப்பட்ட வரி	1,575	1,288	-	1,575	1,288	22
உரிமை முதல் கருவிகளில் நியாயமான பெறுமதி	378	169	-	378	169	124
	(2,379)	(4,562)	48	3,321	(4,563)	173
இலாபம் மற்றும் நட்டம் என மறுவகைப்படுத்தப்படக்கூடிய அல்லது வகைப்படுத்தப்படக்கூடிய உருப்படிகள்						
திறைசேரி உண்டியல்	(66,778)	(2,109)	(3,066)	41,793	(463)	9,127
திறைசேரி முறி	(58,223)	(173,000)	66	23,215	(37,156)	162
விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள ஏனைய தொகுக்கப்பட்ட வருமானத்தின் ஊடான நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்ட நிதிச் சொத்துக்கள் மூலமான முதலீட்டின் தேறிய இலாபம்/(நட்டம்)	(125,001)	(175,109)	29	65,008	(37,619)	273
காலப்பகுதிக்கான மொத்த விரிவான வருமானம்/(நட்டம்) நிகர வரி	30,000	47,358	(37)	(15,602)	9,029	(273)
	(95,001)	(127,751)	26	49,406	(28,590)	273
காலப்பகுதிக்கான வரி நீங்கலாக ஏனைய விரிவான வருமானம்	(97,380)	(132,313)	26	52,727	(33,153)	259
மேற்குறிப்பிட்டவற்றுடன் தொடர்புடைய ஒத்திவைக்கப்பட்ட வரி	400,836	(409,439)	198	443,345	(115,862)	483

நிதி நிலைமைக் கூற்று

திகதிக்கு	31-12-2022	31-12-2021 (கணக்காய்வு செய்த)	வளர்ச்சி
	ரூ. ' 000	ரூ. ' 000	%
சொத்துக்கள்			
காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள்	1,232,273	1,214,754	1
மத்திய வங்கிகளுடனான மீதிகள்	1,311,926	567,802	131
வங்கிகளுடனான பணியமர்த்தல்கள்	-	601,151	(100)
நிதி உபகரணங்களிலிருந்து பெறப்பட்டவை	-	3,200	(100)
குறைந்து செல்லும் செலவில் நிதிச் சொத்துகள் - ஏனைய வாடிக்கையாளர்களிடமிருந்து கடன்கள் மற்றும் முற்பணங்கள்	35,960,080	40,490,736	(11)
குறைந்து செல்லும் செலவில் நிதிச் சொத்துகள் - கடன் மற்றும் ஏனைய கடன் பத்திரங்கள்	1,995,060	15,528	12,748
ஏனைய தொகுக்கப்பட்ட வருமானம் ஊடாக நியாய மதிப்பீட்டில் அளவிடப்பட்ட நிதிச் சொத்துகள்	10,253,496	10,783,609	(5)
ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்கள்	475,163	518,272	(8)
அருவச் சொத்துக்கள்	335,150	258,942	29
பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள்	984,743	637,588	54
ஏனைய சொத்துக்கள்	1,206,590	675,479	79
மொத்தச் சொத்துக்கள்	53,754,481	55,767,062	(4)
பொறுப்புக்கள் மற்றும் பங்கு மூலதனம்			
வங்கிகளுக்குச் செலுத்தப்பட வேண்டியவை	514,193	926,405	(44)
நிதி உபகரணங்களிலிருந்து பெறப்பட்டவை	30	3,009	(99)
குறைந்து செல்லும் செலவில் நிதிச் பொறுப்புக்கள் - வைப்புக்களின் காரணமாக	37,802,680	40,182,402	(6)
குறைந்து செல்லும் செலவில் நிதிச் பொறுப்புக்கள் - ஏனைய கடனாளிகளுக்கான	3,688,924	3,969,617	(7)
ஒம்வூதிய நலப் பொறுப்புக்கள்	96,806	81,336	19
குத்தகைப் பொறுப்பு	340,542	332,675	2
ஏனைய பொறுப்புக்கள்	1,585,608	946,756	67
மொத்தப் பொறுப்புக்கள்	44,028,783	46,442,200	(5)
பங்கு மூலதனம்			
கூறப்பட்ட மூலதனம்	11,394,421	11,394,421	-
நியதிச் சட்ட ஒதுக்கம்	32,386	32,386	-
பிற விரிவான வருமான இருப்பு மூலம் நியாயமான மதிப்பு	(145,198)	(52,151)	(178)
திரண்ட நட்டம்	(1,555,911)	(2,049,794)	24
வங்கி பங்குதாரர்களின் மொத்த பங்கு ஆதாயம்	9,725,698	9,324,862	4
மொத்தப் பொறுப்புக்கள் மற்றும் பங்கு மூலதனம்	53,754,481	55,767,062	(4)
எதிர்பாரா பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள்	22,367,750	18,687,750	
சாதாரண பங்கொன்றிற்கான தேறிய சொத்துக்கள் மதிப்பு (ரூ.)	11.01	10.56	
விஞ்ஞாபன தகவல்கள்			
ஊழியர்களின் எண்ணிக்கை	598	622	
கிளைகளின் எண்ணிக்கை	23	21	

அத்தாட்சிப்படுத்துகை:
2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனி சட்டத்திற்கு இணங்க இந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

(ஒப்பம்)
டி கஜநாயக்க
தலைவர் - நிதி

கார்கில்ஸ் வங்கியைச் சேர்ந்த முகாமைத்துவப் பணிப்பாளர் மற்றும் தலைவர் ஆகிய நாங்கள் கையொப்பமிட்டு கூட்டாக அத்தாட்சிப்படுத்துவதாவது,
(அ) இலங்கை மத்திய வங்கி தீர்மானித்திருக்கும் உரியபடிவம் மற்றும் பொருள் கூறல்களுக்கு இணங்க மேற்கூறப்பட்ட நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளது எனவும்,
(ஆ) இந்த அறிக்கைகளில் உள்ள தகவல்கள் வங்கியின் கணக்கக்காய்வு செய்யப்படாத நிதிநிலை அறிக்கைகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன.

(ஒப்பம்)
கே பி எஸ் பண்டார
முகாமைத்துவப் பணிப்பாளர்

(ஒப்பம்)
ஆர் ஏ இபெல்
தலைவர்

2023 பிப்ரவரி 23
கொழும்பு

காசுப்பாய்ச்சல் கூற்று

	ஒன்பது மாதங்கள் முடிந்தது	
	31-12-2022	31-12-2021 (கணக்காய்வு செய்த)
	ரூ. ' 000	ரூ. ' 000
தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்கள்		
வரிக்கு முந்திய இலாபம்/(நட்டம்)	182,808	(368,655)
சீராக்கங்கள்:		
வரிக்கு முந்திய இலாபம் உள்படக்கப்பட்ட காசு அல்லாதவைகள்	2,620,406	1,170,489
குத்தகை பொறுப்புக்கு செலுத்தப்படும் வட்டி	(34,271)	(40,857)
சொத்து, ஆலை மற்றும் உபகரணங்கள் மற்றும் பிற சொத்துக்களின் விற்பனையில் ஆதாயங்கள்/(இழப்புகள்)	315	368
ஈவுத்தொகை வருமானம்	(720)	(1,360)
வரையறுக்கப்பட்ட நன்மை திட்டங்களில் செலுத்தப்படும் நன்மைகள்	(12,674)	(10,542)
இயக்க சொத்துகளில் மாற்றம்	(459,491)	(9,697,043)
இயக்கக் பொறுப்புக்களில் மாற்றம்	(2,119,010)	7,679,497
செயற்படு நடவடிக்கைகளில் இருந்தான நிகர நிதி/(பயன்படுத்தப்படும்)	177,363	(1,268,103)
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்		
